


மார்கழி 1980

விலை: ரூபா 1.50சதம்

# வாசகர் வாய்மொழி

## கவினுறு வாழ்த்துக்கள்

தேர்ந்த சிறுகதையினை — தந்த
"தாமரைச் செல்வி"க்கும்;
சீர் பெறு சிந்தனைச் சிற்பிகளின்
செந்தமிழ் கருவூலங்களைத்—தாங்கிய
கார்த்திகை மாதச் சுடருக்கும்
கவினுறு வாழ்த்துக்கள் பல;

பொன். பத்மநாதன், முல்லைத்திவு ரோட்,
நெடுங்கேணி.

## நீ வாழி! நீடூழி!

மனம் விட்டு 'அரி' சொன்ன
மாசற்ற மொழி கேட்டு.........
குணம் கெட்ட தலைவர்களும்
குமுறித் திருந்து வரோ.........?
தலை சாய்க்க(த்) தமிழ்த் தாயின்
தவிக்கின்ற நீசர்களின்
நிலை சாய்க்கும் ஒளிச்சுடரே
நீ வாழி! நீடூழி!!!

ஸ்ரீ தேவிப்பிரியா,
கண்ணு டெக்ஸ், பள்ளக்கெட்டுவ.

## விலைகுறைவாய் நிற்கின்றாய்

ஆயிர முடுக்கள் தம்
ஆனவரை யிணைந் தாலும்
கோயிலிற் கொத்த எம்
கோல சுடரிற் இணையாது
குப்பையாய் மலிந்த வையே
குபேரனு யுழைக் கையிலே
இப்புவியே முழுநிலவே ஏன்
'விலை' குறைவாய் நிற்கின்றாய்?
('விலை' — விற்கும் விலை)

—புலோலியூர் ஆ. இரத்தின வேலன்.

## வாழ்த்துகிறேன்

ஏட்டிக்குப் போட்டியாய்
எண்ணிலா பத்திரிகை மத்தியில்
நாட்டமுடன் நற்பணி புரியும்
தன்னிகரில்லா தனிப்பெருஞ்சுடரே
எட்டுத்திக்கும் ஈரேழு உலகம்
நின்புகழ் நித்தமும் பரவ
மட்டிலா மன மகிழ்வுடன்
உன்னையான் வாழ்த்துகிறேன்.

கெ. தர்மகுலராசா,
8-ம் வட்டாரம், நிலாவெளி.

## சுடரே நீ ஒளியூட்டுவாய்!

"சுடரே நீ! தமிழ் தன்னைத் தா!—எழிற்
சுடராகி ஒளி தன்னைத் தா!
இடர் நீக்க வழிதன்னைச் சொல்—என்றும்
இருள் நீங்கும் ஒளியாகி நில்!
புவிமீது தமிழ் வாழவே—இன்னல்
புரிகின்றோர்! தாம் மாளவே,
செவிசாய்த்து வழி காட்டுவாய்—நீ
செகமெங்கும் ஒளி யூட்டுவாய்!"

செல்வி அ. கௌரி. ஆலையூர்.

## தனித்து நிற்கும் ஜெகநாதன்

ஈழத்துச் சிறுகதையுலகில் ஆரோக்கியமான கதைகளைப் படைத்து வரும் "காவலூர் ஜெகநாதன்" — தனது "கலையும் வயிறும்" சிறுகதை மூலம் எம்மை மேலும் கவர்ந்துவிடுகின்றார்! கொள்கைக்காக வாழும் இலட்சிய வேட்கையுடைய ஒரு கவிஞனின் அவலவாழ்வை.........மிக அழகாகச் சித்திரித்துள்ள கதாசிரியர்—கதையின் நடையிலும் தனித்து நிற்கின்றார்!

அக்காலத்து எழுத்தாளர்கள்; பிரச்சினைகளை நேரடியாக அணுகுவதற்குத் தயக்கம் காட்டியதை ஆதார பூர்வமாக; துணிச்சலுடன் எடுத்துக் காட்டிய பிரம்மாவுக்குப் பாராட்டுக்கள்!

"பொன்னரி," 'இந்து'ஆகியோர் வரைந்த ஓவியங்கள் தமிழக ஓவியர்களுக்கு எந்தவிதத்திலும் சளைத்தவை அல்ல. "ஈழகணேஷ், "சாந்தி வாணன்" ஆகியோரின் புதுக்கவிதைகள் ரசிக்கும்படியாக அமைந்திருந்தன.

"அன்பு நெஞ்சன்"
(ஜூனியர், யாழ்வாணன்)

## உண்மைக் கதை

சுடர் நடாத்திய பரிசுப் போட்டியில் முதற்பரிசைப் பெற்ற தாமரைச் செல்வி எழுதிய ஒரு ஞாயிறின் உதயம் என்ற கதை பல உண்மைச் சம்பவங்களை வெளிப்படுத்துவதாக இருந்தது. அக்கதைக்கு முதற் பரிசை வழங்கிய சுடருக்கு எனது பாராட்டுக்கள்.

க. சிவசங்கரநாதன், தெய்வங்கேணி,
சாவகச்சேரி

## வேண்டுகோள்

"அரி"அவர்களின் ம. வி. சி. வார்த்தைகள் மன அதிர்ச்சியைத் தரக் கூடியவை. "அரி" அவர்கள் எதற்கும் அஞ்சாதவர்தான். இப்படியே தொடர்ந்து அரசியல் ஊழல்களை அதிர் வேட்டுக்களால் தகர்க்குமாறு வேண்டுகிறேன். பரிசுக்கதைகளும், நடுப்பக்கத்தை அலங்கரிக்கும் மணிக் கவிதைகளும், தமிழ் புதல்வியின் அட்டைப் படைக் கவிதையும் பாராட்டுக்குரியவையே.

செல்வி கங்கா—மங்கை,
சரசாலை.

# மனம்விட்டு சில வார்த்தைகள்

—ஆர்—

"புதிய விகிதாசார தேர்தல் முறைப்படி இன, மத, குல பேதங்களுக்கு சாவுமணி அடிக்கப்பட்டுவிட்டது. இத்தகைய உணர்வு களை மக்கள் மனங்களில் விதைத்து அரசியல் நடத்துபவர்களும் இனி அரசியலில் மரணத் தைத்தான் தழுவ நேரிடும்"

இது யாருடைய சித்தாந்த வாக்காக இருக்கும் என்று நினைக்கிறீர்கள்? இந்த மாதிரி எல்லாம் சந்தர்ப்பத்துக்கு ஏற்ற மாதிரி தத்துவ வார்த்தைகளை உதிர்க்கக் கூடியவர் வேறு யாராக இருக்க முடியும். சாட்சாத் ஸ்ரீ லங்காவின் தர்மிஷ்ட சனாதி பதியேதான்.

வெள்ளவத்தை சைவமங்கையர் கழக வித்தியாலய விழாவில் இப்படிப் பேசிய திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் முன்னிலையில் தான், பொலநறுவையில் நடந்த ஏர் பூட்டு விழாவின் போது, 'இனத்துவேஷ மன்னர்' சிறில் மத்தியூவின் 'கவுத கொட்டியா (யார் புலி?) என்ற இனவெறி நூல் விநியோகிக்கப் பட்டது.

அன்று இந்நூல் விநியோகத்தைப் பார்த்து ரசித்து புன்முறுவல் பூத்த அதே ஜனாதிபதிதான், வெள்ளவத்தையிலே இப்படி புதுத் தத்துவம் பேசி புனிதராக மாறியிருக் கிறார்.

1977ஆம் ஆண்டின் ஆவணிக் கலவர ஆரம்ப கட்டத்தில் — சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் தாக்கப்பட்ட நேரத் தில் — உயிர் பறிக்கப்பட்ட வேளையில்—நமது சகோதரிகளின் கற்பு சூறையாடப்பட்ட போது இவர்பேசிய "சண்டை என்றால் சண்டை; சமாதானமென்றால் சமாதானம்" என்ற பேச்சை நமது தலைவர்கள்தான் மறந் திருந்தாலும் நம்மால் இலகுவில் மறந்து விட முடியுமா?

தமிழர்கள் தம் உயிரை கையில் பிடித்துக் கொண்டிருந்த அந்த ஆபத்தான வேளையில் பொறுப்பற்ற முறையில் பேசிய ஒருதலைவர் எப்படிப்பட்டவராக இருக்க முடியும்?

இன்று இந்த மகா பெரிய புனிதரின் மந் திரி சபையில் முக்கிய பதவி வகிக்கும் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் சிறில் மத்தியூ பாராளுமன்றத்தின் உள்ளேயும் வெளியே யும் பேசும் இனவெறிப் பேச்சுக்கள் தமிழ் நெஞ்சங்களை ரணகளமாக்கிக் கொண்டி ருக்கின்றன.

ஒரு புறம் அமைச்சர்களின் துவேஷப் பேச் சுக்கள்; மறுபுறம் பிரதமரின் இனிய பேச் சுக்கள். அரசியல் மேடையில் நன்றாகத்தான் நாடகமாடுகிறார்கள்.

ஐ. தே. க. தலைவர் யார்? அவரின் அர சியல் வரலாறு என்ன? என்பதெல்லாம் தமி ழர்களுக்கு புதிய சங்கதி அல்ல; ஆட்சிக்கட் டிலைப் பிடிப்பதற்காக தமிழர்களை பகடைக் காய்களாக பயன்படுத்தியவர்கள்தான் இந்த ஜே. ஆரும், எஸ். டபிள்யூ ஆர். டி.பண்டார நாயக்காவும் என்பது நமக்கு மறக்கமுடியாத பழையபாடங்களே.

ஐ. தே.க.தலைவர்களின் புதுப்புது வேடங் களை (ஏர் பூட்டு விழா விவசாய வேடங்கள் உட்பட) பார்த்து மயங்கிய சிங்கள மக்களே இன்று அவர்களின் அரசியலுக்கு சாவு மணி அடிக்க தயாராகி விட்டபோது, தமிழ் மக் களிடம் புதிய பல்லவியை பாடும் ஐ. தே. க. 'தலை'வர்களுக்கு எமது ஆழ்ந்தஅனுதாபங்கள்.

---

## கிறிஸ்மஸ், புதுவருட வாழ்த்துக்கள்

எமது வாசக அன்புள் ளங்கட்கும், விற்பனைப்பிரதி நிதிகள் விளம்பரதரார்கள் அனைவருக்கும் எமது உளம் நிறைந்த கிறிஸ்மஸ் — புது வருடவாழ்த்துக்களை தெரி வித்துக் கொள்கிறோம்.

ஆ—ர்.

---

அட்டைப்படக் கவிதை

## மறப்பேனா?

—செல்வி அ. கௌரி—

மான்விழி ஒத்த மருள் விழிகள் — கரு
மையும் பூசிய இருபுருவம்!
தேன் என இனிக்கும் கனிப்பேச்சு! — என்
தேவிஉனை நான் மறப்பேனா?
பூக்கள் விரிவதைப் போன்றே நீ — தினம்
புன்னகை புரிவாய் எனைக்கண்டு
ஏக்கம் தவிப்பாய் சிரிப்பாலே — உயிர்
எந்தன் தலைவி மறப்பேனா?




ஓர் இருதய நோயாளி அவசர சத்திர சிகிச்சைக்கு ஆளானுர்.

டாக்டருக்குதவியாகச் சக டாக்டர்கள் — நேர்ஸ் மார் பணிபுரியத் தொடங்கினர்.

சிகிச்சை நெஞ்சு மூளைப் பாட்டில் ஆரம்பமாயிற்று.

கிருத்தியங்கள் தங்கு தடையின்றி அவதானமாக — துரிதமாக — பதனமாக நிகழ்ந்து கொண்டிருந்தன.

பழத்தில் ஏற்றும் ஊசி போல் 'களுக்'கென ஊடுருவிச் சென்ற அறுவைக்கத்தி, ஒரு கட்டத்தில், நெஞ்சின் மையப் பாடத்தே 'சடக்'கெனத்தடங்கிற்று.

தடங்கல் கண்ட டாக்டரின் இதயம் ஏதும் புரியாமல் ஒரு கணம் 'டுமுக்'கென துடித்தது.

டாக்டரோ உயிரின் உறுப்பியல்புகளைக் கசடறக் கற்றுத்தேறிய நிபுணர்.

ஆனுல், இது அவருக்குப் பிடிபடவில்லை.

'இதயத்தினூடே அறுவைக்கத்தி தடக்கவே முடியாது' என்பது அவர் திடம்.

எனினும், இந்த 'விபரீதத்தைப் 'புலனுய்வு செய்யவும் 'சக்தி'யற்றுத், 'தறு தறு'த்து முழிசலானுர்.

"ஒருவேளை கத்தி சவண்டு எலும்பிடுக்கில் தாவிற்ருே?" என்று அபிப்பிராயங் கூறினுர்.


"இருக்காது, இரத்த ஒட்டம் கத்தியைத் தடை செய்திருக்கும்" என்று ஐயங் கொண்டார் அடுத்த டாக்டர்.

"இல்லை, கத்தி ஒடிந்து போயிருக்கும்" என்ருர் மறு டாக்டர். இப்படியாக மூன்று டாக்டர்களும் தீவிர 'ஆராய்ச்சியில் இறங்கி, தங்கள் மூளைகளை வறுத்தெடுத்துத் திணறிக் கொண்டிருந்தனர்.

இந்தச் சங்கடத்தை உன்னிப்பாய்க் கவனித்துக் கொண்டு நின்ற நேர்ஸ், டாக்டரைப் பார்த்துச் சிரித்தாள்.

"சேர், இதன் உண்மையான காரணம் இப்போது எனக்குப்புரிந்து விட்டது."

டாக்டர்கள் மலைத்துப்போய்விட்டனர்.



சத்திர சிகிச்சை நிபுணரே நாணித்துக் கொண்டு நேர்ஸை விழித்துக் கேட்டார்:

"நேர்ஸ், அது என்ன காரணம்?"

"சேர், இவர் நெஞ்சுக்குள்ளிருப்பது மென்னிதயமல்ல; கண்டங்கருங்கல்லு"

"ஆ .....................!?'

வியப்பிலாழ்ந்த டாக்டர்கள் விநோதமாக ஏக காலத்தில் கேட்டனர்:

"நீர் இதனை எப்பிடிக்கண்டுபிடித்தீர்?"

நேர்ஸ் நிதானமாக பதிலளித்தாள்;

"சேர், இந்த மனிதன் ஓர் முதலாளி!"

(கற்பனை)

வாசகர்கள் கவனத்துக்கு

## 'ஆத்மாவின் தைரியம்'

'ஆத்மாவின் தைரியம்' என்ற சிறுகதையின் தொடர்ச்சியை 33ஆம் பக்கம் பார்க்கவும்.

சுடர்
CHUDAR
(கலை இலக்கியத் திங்களிதழ்)

வள்ளுவராண்டு 2011
மார்கழி—1980
சுடர்—6
ஒளி—9
ஆரம்பம்: சித்திரை 1975

வெளியிடுபவர்கள்:
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை,
கொழும்பு—12.
தொலைபேசி: 23411

# அசுர சாதனை

மனமார பாராட்டுகிறோம்! வாயார வாழ்த்துகிறோம்!

ஆனந்த விகடன் தனது பொன்விழா ஆண்டு நிறைவையொட்டி நடத்திய நாவல் போட்டியில் மர்ம நாவலுக்கு முதல் பரிசை தட்டிக் கொண்ட தமிழ் ஈழ எழுத்தாளர் அருள் சுப்பிரமணியம் அவர்களே நமது பாராட்டிக்கு உரித்தானவர்.

அகில உலகத்திலும் உள்ள தமிழ் எழுத்தாளர் மத்தியில் போட்டியிட்டு இச் சாதனையை நிலைநாட்டியது இரட்டிப்பு மகிழ்ச்சியாகும்.

அதிலும் தமிழ் நாட்டில் உள்ள பல எழுத்தாள ஜாம்பவான்களை தோற்கடித்து இச்சாதனையை புரிந்தது பெரிய அதிசயமாகும்.

பரிசுத் தொகையும் கொஞ்ச நஞ்சமல்ல. ரூபா இருபதினாயிரம். இலங்கை காசில் ரூபா ஐம்பதினாயிரம் ஆகும்.

ஈழநாட்டு எழுத்தாளர்களுக்கு ஒரு மனக் குறைவு — ஆதங்கம் உண்டு. அதுதான் தமிழ் நாட்டு எழுத்தாளர்கள் பத்திரிகைகள் தங்களை மதிப்பதில்லை — கௌரவப் படுத்துவதில்லை என்பது.

இங்குள்ள படைப்பாளிகளது படைப்புக்களை வேண்டுமென்றே புறக்கணிப்பு செய்கிறார்கள் என்றும் ஒரு குற்றச்சாட்டு. ஆனால், அருள் சுப்பிரமணியத்தின் சாதனை இத்தகைய மனக்குறைவு — ஆதங்கம் — குற்றச்சாட்டு இவற்றில் உண்மை அர்த்தம் இல்லையென்பதை நிரூபித்திருக்கிறது.

அப்படித்தான் ஒரு புறக்கணிப்பு இருந்தாலும் அது நீண்ட காலத்துக்கு நிலைத்து நிற்க முடியாது.

உண்மையான திறமையிருந்தால் அதற்கு மற்றவர்கள் தலைவணங்கியே ஆக வேண்டும்.

அருள் சுப்பிரமணியம் அவர்களின் 'அவர்களுக்கு வயது வந்துவிட்டது' என்ற நாவலை வாசித்தவர்கள் ஈழத்தில் ஒரு தலைசிறந்த நாவலாசிரியர் வளர்ந்து வருகிறார் என்பதை எளிதில் புரிந்து கொண்டு இருப்பார்கள்.

அதன் தொடர்ச்சியே அவரது இன்றைய பரிசுப் படைப்பான நாவல்.

அருள் சுப்பிரமணியத்தின் அசுர சாதனை ஏனைய ஈழ எழுத்தாளர்களுக்கு ஒரு பெரிய உந்து சக்தியாக விளங்க வேண்டும்.

மீண்டும் அவரைப் பாராட்டுகிறோம் — வாழ்த்துகிறோம்.

# கைத்தொழில் அதிபருடன் சில மணி நேரங்கள்

ஈழத்திலுள்ள முன்னணித் தொழிற்சாலைகளில் ஒன்ருக விளங்குவது மில்க்வைற் தொழிலகமாகும். சவர்க்கார உற்பத்தித் தொழிலாக மட்டுமன்றி பல நூல்களையும் பல பிரசுரங்களையும் இலவசமாகவே மக்களுக்கு வழங்கும் ஒரு கலையகமாகவும் பல சுதேச உற்பத்திப் பொருட்களைத் தன்னகத்தே கொண்ட நல்லதோர் காட்சிக் கூடமாகவும் அது மிளிர்கின்றது. இதன் அதிபராக விளங்கும் உயர்திரு. க. கனகராசா அவர்கள் எமக்களித்த செவ்வி இங்கே இடம் பெறுகிறது.



மில்க்வைற் அதிபர்.
உயர்திரு. க. கனகராசா ஜே.பி. அவர்கள்

கேள்வி: உங்களுடைய வாழ்க்கை வரலாற்றைச் சுருக்கமாகக் கூற முடியுமா?

பதில்: எனது பிறந்த இடம் கோட்டடி. யாழ்ப்பாணம் ஜில்னர் கல்லூரியில் கல்வி கற்றபின் எனது தந்தையார் ஆரம்பித்த இத் தொழிலைத் தொடர்ந்து நடத்தி வருகிறேன்.

கேள்வி: நீங்கள் சவர்க்காரக் கைத் தொழிலைத் தெரிவு செய்யக்காரணம் என்ன?

பதில்: எனது தந்தையார் இத் தொழிலைக் குடிசைக் கைத்தொழிலாகவே ஆரம்பித்தார். பின்னர் நாம் அதை நவீனமயப் படுத்தி விருத்தி செய்து கொண்டோம். 'முயற்சியுடையார் இகழ்ச்சியடையார்' என்ற கூற்றிற்கு ஏற்பத் துணிந்து இதில ஈடுபட்டேன். வெற்றியும் பெற்றேன்.

கேள்வி: வேறு எத்தகைய தொழிற்சாலைகளைத் தமிழ்ப் பிரதேசங்களில் அமைக்க முடியும் எனக்கருதுகிறீர்கள்?

பதில்: எமது தொழிற்சாலையிலுள்ள மூலப்பொருள் பதனிடும் இயந்திரம், உற்பத்திப் பொருட்களை வெட்டும் இயந்திரம் முதலிய பல இயந்திரங்கள் எமது சொந்தப் பிரதேசத்தில் உருவாக்கப்பட்டவையாகும். எமது பிரதேசத்தில் பொறியியல்துறை விருத்தி பெற்றுள்ளது. ஆற்றல் மிக்கோர் நிறைய இருக்கிருர்கள். தொழில் நுட்பத் துறையிலும் அப்படியே. ஆனல் ஊக்கப் படுத்துவோர் கிடையாது. மோட்டார்க்கார் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்படுமானல் நல்ல ரகக் கார் உற்பத்தித் தொழிற்சாலை, கார் பழுதுபார்க்கும் தொழிற்சாலை உதிரிப்பாகங்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை நிச்சயமாக இங்கே நிறுவமுடியும்.

உள்ளூரில் கிடைக்கும் மூலப் பொருட்களான வேப்பம் விதை இலுப்பை விதை இவற்றை மூலப்பொருட்களாகக் கொண்டு பல உற்பத்திப் பொருட்களைச் செய்யலாம்.

நாம் "நீம் சோப்" தயாரிக்க இவற்றைப் பயன்படுத்துகிறோம். இவற்றின் சக்கையை உரமாகவும், நுளம்பு போன்றவற்றை அகற்ற சுகந்த தூபமாகவும் பயன்படுத்துகிறோம். இலுப்பை விதைகளை ஒலிவ் ஸ்நானப் பவுடர் செய்யப் பயன்படுத்துகிறோம். தேங்காய் எண்ணெய், கோஸ்டிக் சோடா முதலியவை இங்கே கிடைக்கின்றன. எமது உற்பத்திப் பொருட்களுக்குத் தேவையான புல்லெண

ணையக்கூட உள்ளூரிலிருந்தே பெறுகிறோம்.

எமது தேவைக்கேற்ப பால், முட்டை உற்
பத்தி போதாது. வீட்டிற்கு ஒரு பசு வளர்க்க
வேண்டும். நல்ல செம்பாட்டுமண் யாழ்ப்
பாணப்பகுதியில் கிடைக்கின்றது. இத்தரை
யில் வீடுகள் கட்டப்படுமானல் எதிர் காலத்
தில் உப உணவுப் பயிர்கள் உற்பத்தி செய்
யக்கூட நிலம் கிடையாத நிலை ஏற்படும்.
வீடுகளைக் கட்டுவோர் தரைப்பகுதியைக்
குறைத்து மாடி வீடுகளைக் கட்ட வேண்டும்.
மழை நீரையும் பாதுகாக்க வேண்டும். மக்கள்
குடா நாட்டை விட்டு வெளியேறி குடியேற்
றத் திட்டங்களில் குடியேற வேண்டும். விவ
சாயம் கைகொடுக்கும்.

கேள்வி: தமிழ்ப் பகுதிகளில் பனம் பொருட்களை மூலப்பொருளாகக் கொண்டு பல கைத்தொழில்களை ஆரம்பிக்கலாம். அத்தகைய கைத்தொழில் விருத்திபற்றி நீங்கள் கூறக்கூடிய ஆலோசனைகள் என்ன?

பதில்: தமிழ்ப்பகுதிகளில் பனம்பொருட்களை மூலப்பொருட்களாகக்கொண்டு நாம்பல உற்பத்திப்பொருட்களைச் செய்யலாம். பனம் பழத்தைக் கொண்டு ஜாம் உற்பத்தி செய்யலாம். ஒடியலை மாவாக்கி ஏற்றுமதி செய்யலாம். பனம் தும்பைக் கொண்டு பிரஷ்செய்யலாம். பாண்டிச்சேரியில் பனையோலையை மூலப்பொருளாகக் கொண்டு காகிதம் உற்பத்தி செய்கிறார்கள். இதைவிட குமரப்பா புரத்தில் சுமார் 25 ஏக்கரில் பனம் பொருட்களை மூலப் பொருட்களாகக் கொண்டு சீனி, ஜாம், சொக்களேட், கல்லாக்காரம் முதலிய பலவற்றைச் செய்கிறார்கள். இவற்றையெல்லாம் நாம் இங்கேயும் செய்யலாம். பனை ஓலையில் செய்த பொருட்களை மக்கள் பாவிக்க வேண்டும்.

கேள்வி: இத்தகைய கைத்தொழில்களை ஆரம்பித்து விருத்திசெய்ய நாம் என்னென்ன நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்?

பதில்: இலங்கையில் இருக்கும் கைத்தொழிற் சபைகள் இந்தியா முதலான இடங்களுக்குச் சென்று பனம் பொருள் உற்பத்தி சம்பந்தமான விடயங்களைப் பார்வையிட வேண்டும். இளைஞர்களை அனுப்பி இவை தொடர்பாகப் பயிற்றுவிக்க வேண்டும். கருத்தரங்குகள், செய்திப் படங்கள் மூலமாக மக்களுக்கு வ்ளக்க வேண்டும்.

கேள்வி: இத்தகைய கைத்தொழில்களை ஆரம்பிக்க விரும்பும் இளைஞர்களுக்கு நீங்கள் கூறக்கூடிய அனுபவ ரீதியான ஆலோசனை யாது?

பதில்: இளைஞர்கள் இத்துறையில் ஈடுபடும்போது எத்தகைய போட்டியையும் எதிர்நோக்கத் தயாராக வேண்டும். றொபர்ட் புரூஸ் போல் தோல்விகள் ஏற்படினும் முயற்சியைக் கைவிடாத மனப்பாங்கு வேண்டும். பணம் தேடும் நோக்குடனன்றி சேவை மனப்பான்மையுடன் செய்யவேண்டும்.

கேள்வி: கைத்தொழிற் துறையில் உங்களது வெற்றியின் சூட்சுமம் என்ன? இவ்வளவு தொகையான பிரசுரங்களை எவ்வாறு நீங்கள் இலவசமாகவே வெளியிட்டு விநியோகம் செய்யக் கூடியதாகவிருக்கிறது?

பதில்: மக்களது ஆதரவுதான். எனக்குக் கிடைக்கும் வருமானத்தில் ஒரு பகுதியை மட்டும் எடுத்துக்கொண்டு மிகுதியை மக்களுக்கே செலவு செய்கிறேன். மக்களுக்கு மண்வெட்டி முதலிய உபகரணங்களையும், பனையோலை வாருகின்ற இயந்திரங்கள், மற்றும் குடியேற்றத் திட்டங்களில் கிணறுகள் வெட்ட உதவியும் மழை நீரைச் சேகரிக்கும் முகமாக குளங்களை ஆழமாக்க வேண்டிய உபகரணங்கள் கொடுக்கிறோம். வீட்டுத் தோட்டம் செய்ய எல்லாரையும் உற்சாகப்படுத்தி இலவச விதைகள் கொடுக்கிறோம். தென்னம் பிள்ளைகள் மலிந்த விலைக்கு விநியோகம் செய்கிறோம். எனக்குக் கிடைக்கும் வருமானத்தை வீணாக ஆடம்பரச் செலவுகளில் செலவு செய்யாமல் மக்களுக்கு பயன் தரக்கூடிய நூல்களையும் பிரசுரங்களையும் வெளியிட்டு வருகிறேன்.

கேள்வி: மரம் நாட்டும் இயக்கத்தில் உங்களது பணிபற்றிக் குறிப்பிட முடியுமா?

பதில்: இப்போது பழம் தரும் மரங்களையும் நிழல் தரு மரங்களையும் நாட்டி வருகின்றேன். மூன்று இலட்சம் பனம் விதைகளையும் நாட்டியுள்ளேன். மேலும் கொடுத்து வருகிறோம் பசுமாட்டிற்குத் தீனியாகவும், விறகாகவும் பயன்படுத்தக்கூடிய இபில் இபில் விதைகளை வழங்கி வருகிறேன். குடியேற்றத்

## பட்டதாரிகள்!

ஒருவர்: எனது பிள்ளைகள் எல்லோரும் பட்டதாரிகள்.

மற்றவர்: அப்படியா! எதிலெதில் பட்டதாரிகள்?

ஒருவர்: பட்டம் கட்டிப் பறக்க விடுவதில்!

க. மாணிக்கம்.

திட்டங்களிலுள்ள மரங்களை வெட்டிவிட்டார்கள். இப்போது அங்கு பனம் விதைகளை நாட்டி வருகின்றோம். வருடந்தோறும் ஒருகோடி மரங்களை நாட்ட வேண்டும். வயல்கரை, தரிசு நிலங்கள் எங்கும் நாட்ட வேண்டும். நீர் வளச் சபை வழங்கும் புல் சிறந்த ரகப் புல் ஆகையால் அவற்றை மக்கள் பயன் படுத்தி கால்நடைகளுக்கு நல்ல தீனியாக உபயோகிக்க வேண்டும்.

கேள்வி: நீங்கள் சமய நூல்களையும் பொருளாதார அடிப்படையிலான நூல்களையும்தான் வெளியிடுவதாகவும் ஈழத்து இலக்கிய கர்த்தாக்களின் தரமான படைப்புக்களுக்கு நூல் உருவம் கொடுக்க முன்வரவில்லையேஎன்றும் கருத்துக்கூறப்படுகின்றதே, இதைப்பற்றி உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: மக்கள் முன்னேற்றத்திற்குக் கைத்தொழில், விவசாயம் சம்பந்தமான நூல்களையும் மக்கள் ஒழுக்கமாக வாழ சமய நூல்களையும் வெளியிடுகிறோம். இதனால் இலக்கிய நூல்களில் தற்போது ஈடுபடமுடியாதுள்ளது. எல்லா வெளியீடுகளையும் ஒருவர் செய்வது சிரமமாகையால் இலக்கியத் துறையில் அக்கறை காட்டவில்லை.

கேள்வி: நீங்கள் யோகக் கலையில் ஈடுபட்டிருப்பதாக அறிகிறோம். இது பற்றிக் கூறமுடியுமா?

பதில்: யோகாசனம் சம்பந்தமான பல நூல்களை வெளியிட்டு இருக்கிறேன். தினமும் அரைமணிநேரம் யோகப்பயிற்சி செய்கிறேன். இதனால் நோயற்ற வாழ்வு வாழ்கிறேன். யோகாசனம செய்யாமல் மனிதன் சம்பூரணமான வாழ்வு வாழமுடியா துஎன்பதே எனது அபிப்பிராயம். யோகக்கலையை நான் பெரிதும் விரும்பக் காரணம் யோகாசனப்பயிற்சி மூலம் மனிதனது சிந்தனை தூய்மை பெறுகின்றது. நல்ல எண்ணங்கள் உருவாகின்றன. அப்போது அந்த நல்ல எண்ணங்கள் மூலம் மக்கள் பணி செய்யக் கூடியதாகவுள்ளது. யோகாசனப் பயிற்சியை முறையாகப்பெறின் வைத்திய சாலைகளைக் கட்ட வேண்டிய தேவையே இருக்காது. ஆகவே பாடசாலைகள் மூலமும் வேறு நிறுவனங்கள் மூலமும் இப்பயிற்சி அளிக்கப்படவேண்டும்.

கேள்வி: தொழில் ரீதியாக நீங்கள் ஏதாவது கஷ்டங்களை எதிர் நோக்குகிறீர்களா?

பதில்: மூலப் பொருட்களுக்குத் தட்டுப்பாடு ஏற்படுவதுண்டு. மூலப்பொருட்களைச் சேமித்து வைப்பதன் மூலம் அக்குறையை நிவர்த்தி செய்கிறேன்.

கேள்வி: ஒரு குடியேற்றத் திட்டமொன்றை நீங்கள் ஏற்படுத்தலாமே?

பதில்: அத்தகைய திட்டமொன்றை ஏற்படுத்த மக்களது ஒத்துழைப்பு அவசியமாகும். இப்போது கிடைக்கும் ஒத்துழைப்புப் போதாது. கூட்டுப்பண்ணை ஒன்றை அமைக்க மக்கள் ஒத்துழைப்புத் தந்தால் நிச்சயமாகச் செய்வேன்.

கேள்வி: எதிர்காலத்தில் எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ள எண்ணியிருக்கிறீர்கள்?

பதில்: எதிர் காலத்தில் எமது சவர்க்காரத் தொழிலை விருத்தி செய்யக் கூடிய வழிவகைகளை ஆராய்ந்து கொண்டிருக்கிறேன்.

கேள்வி: உங்கள் பொழுதுபோக்கு என்ன எனக் குறிப்பிட முடியுமா?

பதில்: அறிவு நூல்களைப் படிக்கிறேன். நாடகம், சங்கீதக் கச்சேரி, பரத நாட்டிய அரங்கேற்றம் முதலியவற்றிற்குச் செல்வேன். யோகாசனப் போட்டி, கராட்டிப் போட்டி முதலியவற்றிலும் அக்கறை செலுத்துகிறேன்.

> **'புரட்சிக்கு வழி'**
>
> எண்ணிக்கையில் மாத்திரம் பெரும்பான்மையினர் என்ற வலிமையினால், சிறுபான்மைச் சமூகத்தின் உரிமைகளில் ஒன்றேனும் அழிய நேரின், அது ஒன்றே எவ்வித ஒழுங்கின்படி நோக்கினும், ஒரு புரட்சி ஏற்படுவதற்குப் போதிய நியாயமாகிவிடும்.
>
> — ஆபிரகாம்லிங்கன்.

கேள்வி: உங்களது வாழ்க்கையில் மறக்க முடியாத சம்பவம் ஒன்றைக் குறிப்பிட முடியுமா?

பதில்: நான்காவது தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்தில் நடைபெற்றபோது இறுதிநாளில் இடம் பெற்ற பயங்கரச்சம்பவங்களை யாரால் என்றுதான் மறக்க முடியும்?

கேள்வி: எமது சுடர் சஞ்சிகைபற்றி உங்களது அபிப்பிராயம் என்ன?

பதில்: நல்ல தரமான சஞ்சிகை. முற்போக்கான பல நல்ல கருத்துக்கள் நிறையவுண்டு. மக்கள் சுதேசச் சஞ்சிகைகளை ஆதரிக்கும் மனப்பாங்கு பெற்று அதனை வளர்க்க வேண்டும்.

பேட்டி கண்டவர்கள்:
திரு. பொன். பூலோகசிங்கம்
திரு. கனக. சுகுமார்.

# இலக்கிய பிரச்சினைகள்

-ரம்மா-

அக்காலப் பகுதியில் ஈழத்தின் தமிழிலக்கியத்தில் முனைப்புப்பெறத் தொடங்கிய இலக்கிய இயக்கங்கள் மூன்று. முதலாவது முற்போக்கு எழுத்தாளர் சங்கம். இரண்டாவது நற்போக்கு இலக்கியம். மூன்றாவது மு. தளையசிங்கம் முன் வைத்த சர்வோதயம் ஐம்பதுகளில், சமகால சமுதாய பொருளாதார ஏற்றத் தாழ்வுகளை இலக்கியத்துக்குப் பொருளாகக் கொள்ள வேண்டுமென்ற உணர்வுடனும் ஈழத்துக்கெனத் தனித்தன்மைவாய்ந்த தேசிய இலக்கியம் உருவாக வேண்டுமென்ற கருத்துடனும் உருப்பெற்ற மார்க்ஸிய சித்தனையடிப்படையிலான முற்போக்கு இயக்கம் 1962 இல் ஒரு முக்கிய கட்டத்தை அடைந்தது. அவ்வாண்டில் அவர்கள் நடத்திய அகில இலங்கைத் தமிழ் எழுத்தாளர் மாநாட்டை ஒட்டி வெளியிட்ட புதுமை இலக்கியம் என்ற மாநாட்டு மலரிலே பிரேம்ஜி எழுதிய நமது இலக்கியப் பிரச்சினைகள் என்ற கட்டுரை முற்போக்கு இலக்கியக்காரரின் கொள்கைப் பிரகடனம் என்ற சிறப்புக்குரியது,

அக்கட்டுரையிலே அவர் நமது இலக்கியத்தின் முன்னுள்ள மிக முக்கியமான கடமைகள் என எட்டு விடயங்களை முன்வைக்கிறார்.

1) ஏகாதிபத்திய ஆதிக்கத்தின் எச்சசொச்சங்களை ஒழித்தல்.

2) நிலப்பிரபுத்துவ ஆதிக்க- பிற்போக்கு சமுதாயக் கண்ணோட்டங்களை முடிவு கட்டுவது.

3) சாதி — தீண்டாமை ஒழிப்பு.

4) பெண்ணடிமை ஒழிப்பு.

5) வேலையின்மை, வீடின்மை முதலிய அவலங்களைச் சித்திரித்தல்.

6) வகுப்புவாத - திரிபுவாதஎதிர்ப்பு — தேசிய ஒற்றுமையை வளர்ப்பது.

7) தேசிய அபிவிருத்தி முயற்சிகளை சித்திரிப்பது'

8) சகல துறைகளிலும் ஜனநாயக மாற்றத்துக்கு தூண்டுவது.

மேற்படி விடயங்களில் அன்றைய தேசியப் பிரச்சினைகளிலொன்றான பெருந்தேசிய வாத— பேரினவாத ஊடுருவலும் அதற்கெதிரான தமிழர்களது தற்பாதுகாப்புத் தமிழுணர்ச்சி தொடர்பான சிந்தனைகளும் ஏற்கப்படாமல் ஒதுக்கப்பட்டுள்ளன என்பதோடு வகுப்பு வாத எதிர்ப்பு— தேசிய ஒற்றுமை வளர்ப்பு என்ற கருத்தில் கண்டிக்கப் பட்டுமிருக்கின்றனவென்பதும் கவனத்திற் கொள்ள வேண்டியன.

பேரினவாத ஊடுருவல் மூடி மறைக்கப் படமுடியாத அளவு வளர்ந்த நிலையில் 1975 இல் தேசிய ஒருமைப்பாடு மாநாடு கூட்டி நாட்டின் தலைவியிடம் ஒருமைப்பாட்டுக்கான திட்டத்தை முன்வைத்தபோது கூட தமிழ் மக்களின் பிரதேசங்களைச் சிங்களக் குடியேற்றங்களிலிருந்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்கத் துணிவு கொண்டிருக்கவில்லை என்பது குறிப்பிட்டு நோக்கத்தக்கது.

அறுபதுகளின் ஆரம்ப ஆண்டுகளில் 'இலக்கியத்தில் மொழி' பற்றிய மரபுப் போராட்டத்தில் பண்டித மரபினரை எதிர்ப்பதிலும் 65—70 ஐக்கிய தேசியக்கட்சியாட்சிக் காலத்தில் வர்க்கப் பிரச்சினைகளை இலக்கியமாக்குவதிலும் எழுபதுகளின் முதல் ஏழு ஆண்டுகளில் தென்னிலங்கைத் தலைவர்களின் நம்பிக்கைக்குரியவர்களாகி தேசிய ஒருமைப் பாட்டுணர்வை பிரசாரம் செய்வதிலும் இவர்களது கவனம் முழுவதும் குவிக்கப்பட்டிருந்தது.

அறுபதுகளின் ஆரம்ப ஆண்டுகளில் இவர்கள் நம்பியிருந்த சிங்கள தமிழ் சமத்துவம் பேசும்—இடதுசாரி தலைவர்களிற் பலர் சிங்

களை பேரினவாதத்துக்கு அடிபணிந்து தமது அரசியல் தொடர்பான இலக்கிய நிலைப்பாட்டை இவர்கள் மறுமதிப்பீடு செய்து கொள்ளவோ மாற்றியமைக்க முயலவோ இல்லை. 1965 இல் ஐ.தே.க. வுடன் தமிழரசுக் கட்சி இணைந்து தேசிய அரசமைத்த காலப்பகுதியில் தமிழர் பிரச்சினைகளின் வேகம் தேக்கமடைந்த போது இந்த முற்போக்கு அணியினர் வர்க்கப் பிரச்சினைகளை முன்வைத்து இலக்கியம் படைத்தனர். தமிழர் சிங்களவருக் கிடையிலான பகைமை இரு இனங்களையும் சார்ந்த முதலாளித்துவ, முதலாளித்துவ சார்பான ரசனைகள் சார்ந்த சிந்தனைப் போக்கின் சிருஷ்டியே, எனவும் அடிமட்டத்தில் தொழிலாளி — பாட்டாளி வர்க்க நிலையில் மொழி — இனப்பிரச்சினை என்ற ஒன்று அல்ல என்ற கருத்துப்பட பேசியும் எழுதியும் வந்தனர். ஐ.தே.க, தமிழரசு இணைபபு இதற்கு நிதர்சனமான உதாரணமாக இருந்ததால் இலக்கியத்துறையில் ஈடுபட்ட—உருவாகிவந்த—ஆற்றல் வாய்ந்த இளம் சிந்தனையாளர்கள் இக்கருத்துக்களை ஏற்றுக் கொண்டனர். சிலர் இனப்பிரச்சினை என ஒன்று இல்லை என்று கருதுமுன் வந்தனர். வேறு சிலர் பிரச்சினை இருப்பதைத் தம்மளவில ஒத்துக் கொண்டாலும் அதுபற்றிப் பேசுவதோ எழுதுவதோ அல்லது அதில் தமக்குள்ள ஈடுபாட்டைக் காட்டிக் கொள்வதோ முற்போக்கு சிந்தனைக்கு முரண் என்று கருதினர். அதையும் மீறி எழுத முற்பட்ட ஒரு சிலர் பிற்போக்கு வாதிகள் என இகழப்பட்டனர்.

குறிப்பாக 1965—70 காலப்பகுதியில் முற்போக்கு அணி சார்ந்த தலையாய புனை எழுத்தாளர்களாகத் திகழ்ந்த செ. கணேசலிங்கன் தாம் படைத்த ஆறு நாவல்களில் ஒன்றிலேனும் சிங்களவர் தமிழர் பிரச்சினைகளை அவற்றுக்குரிய சமுதாய அடிப்படையில் அணுகவில்லை. தரையும் தாரகையும் நாவலில் கதை நிகழ்ச்சிக்கான பகைப்புலமாக மட்டும் 1958 இனக்கொலைச் சூழலைக் காட்டியுள்ளார். 1962 இல் முன்னர் காட்டிய போராட்ட உணர்வுக்கவிதையைத்தந்த இ. முருகையன் பின்னர் அவ்வுணர்வு தொடர்பாகச் சிந்தனை செலுத்த வில்லை. உருவாகி வந்த சிறுகதை எழுத்தாளர்களும் கவிஞர்களும் சீனாவின் மாமன்தன் மாஓவின் சிந்தனைகளினதும் வியட்நாமில் அமெரிக்கத் தலையீட்டின் விளைவுகளிலும் தமது சர்வதேசப் பார்வையை வளர்த்துக் கொண்டு இங்கு அவற்றைப் பிரதிபலிப்பதிலும் காட்டிய ஆர்வத்தில் ஒரு சிறு பகுதியையாவது திருகோணமலை மாவட்டத்தில் நடைபெற்ற சிங்கள ஊடுருவல் தொடர்பாகக் காட்டவில்லை. ஒரு சிலர் அலற்றை நோக்கியபோது கண்டிக்கப்பட்டனர்.

சாந்தன் அவர்கள் அன்னியமான உண்மைகள் என்ற தலைப்பில் மல்லிகையில் (1975 ஜனவரி) எழுதிய கதை திருகோணமலையில் பேரின வாத ஊடுருவலை கோடிட்டுக் காட்டுவதாகஅமைந்தது.உடனே அடுத்தஇதழில் அக்கதைக்கு விளக்கம் கோரப்பட்டது.

> "தேசிய ஒருமைப்பாட்டை வளர்க்க அதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் இப்படியான சிறுகதைகள் மல்லிகையில் பிரசுரிக்கப்படுவது தேவைதானா? அக்கதையை நீங்கள் படித்துப் பார்த்துத்தான் பிரசுரித்தீர்களா?

என்று பன்னாலை அ. கார்த்திகைக் குமரன் கேட்கிறார். அதற்கு பதிலளிக்கும் வகையில் மல்லிகை ஆசிரியர்,

> "படித்துப் பார்த்துத்தான் பிரசுரித்தோம்.........சில கருத்துக்கள் மல்லிகையின் பொது நோக்குக்கு ஒத்துவராத போதிலும் கூட சில சந்தர்ப்பங்களில் சிலதை வெளியிட வேண்டிய தேவை பத்திரிகைகளுக்கு ஏற்படுவதுண்டு
>
> ... ... ... ... ... ... ... ...
>
> தேசிய ஒருமைப்பாட்டை அவர் புரிந்து கொண்டுள்ள விதத்தை மல்லிகை வாசகர்களுக்குச் சிருஷ்டி பூர்வமாக விளங்கப்படுத்தவே அக்கதை பிரசுரிக்கப் பட்டது."

என்று விரிவாக எழுதினார் (மல்லிகை பெப்ரவரி 1975

கண்முன்னால் ஒரு பெரும்பான்மை இனம் சிறுபான்மை மக்கள் தொகையின் பாரம்பரிய பிரதேசத்தில் நிகழ்த்தியுள்ள ஊடுருவலை நோக்கவும் அதுபற்றிக் கருத்துத் தெரிவிக்கவும் ஒரு எழுத்தாளனுக்கு சுதந்திரமில்லையா? அப்பிரச்சினையைச் சித்திரிக்கும் கதையை வெளியிடுவது ஈழத்தின் கலை இலக்கிய மாத இதழான மல்லிகையின் பொது நோக்குக்கு மாறுபட்டதா? பெரும்பான்மை இனத்தின் ஆக்கிரமிப்பின் எல்லாவடிவங்களையும் கண்மூடி மௌனமாக சம்மதமாக ஏற்றுக் கொள்வதற்குப் பெயர்தான் தேசிய ஒருமைப்பாடு என்று மல்லிகை கருதுகின்றதா?

(தொடரும்)

# ஆத்மாவின் தைரியம்

அருண். ஜெயராணி



படபடவென இயங்கிய டைப்ரைட்டர்களின் ஓசை பட்டென்று நின்றது.

மத்தியான இடைவேளை. டைப்ரைட்டர் முன் இருந்து கொண்டே கைகளை நீவி விட்டுக் கொண்டாள் வித்யா. டைப் பண்ணிப் பண்ணிப் கை விரல்களெல்லாம் பள பளவென பசுமைபோய் சுருங்கி—

"அப்பா பன்னீர் போகாட்டுக் கை கழுவிஞல் கை ரொம்ப ஸ்வொட்டாகுமாமப்பா"

அவள் கேட்ட மறுநாள் பின்னேரம் பன்னீர்ப்போத்தலுடன் நிற்கிருர் சந்திரசேகரன்.

★ ★ ★

வித்யாவின் கண்களில் நீர் நிறைத்தது. தான் இல்லாத காலத்தில் பிள்ளைகள் எப்படி எப்படியெல்லாம் கஷ்டப் படப் போகிருர்கள் என்று தெரிந்திருந்தால் அப்பா நிச்சயம் பன்னீர் வாங்காமல் காசைச் சேர்த்து வைத்திருப் பார், அப்பா பணமுள்ளவராக இருந்தபோது அவளுக்கு பகிகப்பாட்டுப் பாடிய 'காக்கை'கள் எல்லாம்... அவர் இறந்த பொழுது அவர் தன் குடும்பத்துக்கென்று ஒன்றுமே சேமிக்கவில்லையென்பதை அறிந்தவுடன் எப்படி கரையாமலே பறந்து ஓடிஞர்கள்!

"ஐயோ......என்னை இப்படித் தவிக்க விட்டுவிட்டுப் போயிட்டீங்களே! நான் இந்தப் பிள்ளைகளை எப்படி வளர்த்து ஆளாக்கப் போறன் ...இந்தக் குமர்களை எப்படி கரை சேர்க்கப் போறன்"

அம்மா... அவர் சடலத்தின் மீது விழுந்து விழுந்து கதறும் பொழுது... மூத்தவளான வித்யாதான்......... குடும்பத்துக்கு தலைவஞக......அவளது கண்ணீரை துடைத்து ஆறுதல் படுத்திஞள். அன்று கண்ணீரை துடைக்க ஆரம்பித்த கைகள் தான் இன்று வரை ஓயாமல் துடைத்துக் கொண்டு அவளது தம்பியைப் படிப்பித்து வேலையில் அமர்த்திக் கொண்டு தங்கைகளை வேலை தேடவைத்துக் கொண்டு கடைக்குட்டியைப் படிப்பித்து கொண்டு......

"வீத்தியா நொட் கொயிங் போர் லன்ச்?"

போகிற போக்கில் அவளைத் தட்டி விட்டுப் போஞள் சியாமளா.

அவசர அவசரமாகக் கண்ணைத் துடைத்துக் கொண்டவள் டைப்ரைட்டரில் சொருகி இருந்த பேப்பரை எடுத்துக் கவனமாக லாச்சியினுள் வைத்து மூடிஞள். "இந்த மாதம் கட்டாயம் ராஜிஞமா லெட்டரை மனேஜரிடம் குடுக்க வேணும். எந்தக் காரணத்தைக் கொண்டும் இழுத்துப் போட்டுவிடக் கூடாது"

ரெஸிக்னேஷன் லெட்டரை கொடுக்கும் பொழுது மனேஜரின் முகம் போகிற போக்கைக் கொஞ்சம் கற்பனை செய்து பார்த்தாள். கட்டாயம் திகைத்துப் போவார். பேப்பர்களை வாங்கும் சாக்கில் கையைப் பிடித்து இழுக்க ..."யூ ஹாவ் டைப்ட் நைஸ்லி" என்று சொல்லிக் கொண்டே முதுகில் ஒட்டி 'பிரா'வை நிமிண்ட.... .

இதுக்கெல்லாம் தான் அடுத்த மாதம் இங்கிருக்கப் போவதில்லையென்று தெரிந்தால் எப்படி மனம் துடிச்சுப் போகும்? ... சனியன்கள் வேலைக்கு வருகிற பெண் கொஞ்சம் கஷ்டப்பட்டவள் என்ருல் போதும் தருகிற தொல்லைகளுக்கு அளவேயில்லை......

* * *

கடல் அலைகள் அடித்து அடித்து வீசியபடி இருந்தன. "சுரேன்...அடுத்த மாதத்தில் இருந்து நான் வேலையை விடப் போகிறன்"

அவன் மெதுவாகச் சிரித்துக் கொண்டான்.

"என்ன பேசாமல் இருக்கிறீர்கள் சுரேன்?"

"என்னுடைய இருபத்தியொராம் வயதில் இருந்து இந்தப்பாட்டைத் தான் நான் கேட்டுக் கொண்டிருக்கிறேன் வித்யா....உனக்கு வயது முப்பத்தி ஒன்று"

"நான் கிழவி என்பதை சுட்டிக் காட்டுகிறீங்களா"

"இல்லை வித்யா...நான் கிழவஞகிக் கொண்டிருக்கிறேன் என்பதைச் சொல்கிறேன்... அவ்வளவு தான்"

அவனது பதில் மனதைச் சுருக்கெனத் தைக்க விழிகளில் நீர்த்துளிகள் இரண்டு எட்டிப்பார்த்தன.

"இப்போ என்ன சொல்லி விட்டன் என்று அழுகிருய்! உண்மையைத்தானே சொன்னஞன். ஒவ்வொரு முறையும் வேலையை விடுகிறேன் என்று சொல்கிருயே தவிர..."

"நான் ஏன் வேலையை கட்டிப் பிடித்துக் கொண்டிருக்கிறேன் என்பது உங்களுக்குத் தெரியும் சுரேன். ஒரு வீட்டினுடைய முழுப்பாரமுமே இந்தத் தூணில்தான் பொறிஞ்சிருக்கு. அது பெயர்ந்து விட்டால் வீடே இடிஞ்சு விழுந்திடுமோ என்றுதான் பயமாக இருக்கு"

"டோண்ட் பி ஸில்லி..... வீடு விழுந்தால் கூட எந்த மனிதனும் அதை அப்படியே விட்டு விடுகிறேல்லை வித்தியா, இயன்றளவு அதைக் கட்டத்தான் பார்ப்பான். நீ உன்னால் முடிந்த அளவு குடும்பத்தை பார்த்துவிட்டாய்...இனி உனக்கென்று ஒரு வாழ்க்கையை அமைத்துக் கொள். அப்பொழுது தான் உன் தங்கை தனக்கென்று ஓர் வேலையைத்தேடிக் கொள்வாள் குடும்பச் சுமையைக் குறைக்கவும் முன் வருவாள் வித்யா"

"இவ்வளவு நாளும் அவள் தேடாமல் இருக்கிறாள் என்று சொல்றீங்களா?"

'உண்மையாகத் தேடியிருந்தால் இந்த மூன்று வருடத்தில் ஒரு வேலையாவது கிடைக்காமல் போயிருக்குமா?'

சுரேன் கோபத்தோடு கூறிவிட்டுப் போய்விடுகிறான்.

எத்தனையோ நாட்களுக்குப் பிறகு சந்தித்த சந்திப்பில் இப்படி ஒரு கசப்பை உண்டாக்கி இருக்க வேண்டாமோ? எத்தனை மகிழ்ச்சியோடு சந்திக்க வந்தார். சே...அறிவையும் மீறிச் சில சமயம் நாக்கு எப்படி முன்னுக்கு நீண்டு விடுகிறது!

"ஆறெட்டு நாற்பத்தியெட்டு, ஆறொன்பது ஐம்பத்திநான்கு" வாய்ப்பாட்டை மனனம் செய்யும் தம்பி பாபுவின் குரல். வித்யா வீட்டுக்கு வந்துவிட்டாள்.

அம்மா இந்த மாதத்தோடு வேலைக்கு நோட்டீஸ் குடுக்கலாம் என்றிருக்கிறன்"

"ஹச்சு......ஹச்சு" புரையேறி கன்னங்களிலும் மூக்கிலும்நீர் வடிக்கும் தாயின் தலையில் ஓங்கி அடிக்கிறாள் வித்யா

## பெயரும் பொருத்தமும்!

இன்று நமது இல்லங்களையும் சாலைகளையும் ஒளிமயமாக்கும் இலட்சோபலட்சம் மின் விளக்குகளின் ஒளிக் கதிர்களையெல்லாம் 'லக்சபான' என்னும் ஊரில் இருந்தே பெறுகின்றோம். இந்த ஊருக்குபல ஆயிரமாண்டுகளுக்குமுன்பே 'லக்ஷபான' என்று பெயர் சூட்டிய முன்னோரின் தீர்க்க தரிசனம் வியப்பூட்டுவதாயிருக்கின்றது. காரணம் 'லக்ஷபான' என்பதன் அர்த்தம் இலட்சம் விளக்கு என்பதாகும்'

இதே ஊர்ப்பெயரைப் பிரதிபலிக்கும் 'ஆயிரம் விளக்கு' என்றும் ஓர் ஊர் தமிழ்நாட்டிலும் உண்டு! அவ்வூருக்கும் பெயருக்கேற்ற காரணம் ஏதாவது இருக்கத்தானே செய்யும்.

—கதிர் மாணிக்கம்

"நான் வேலையை விடுவது அவ்வளவு பாரதூரமான விஷயமா?"

"வித்தியா என்ன சொல்றாய்?"

"என்னால் இனியும் வேலை செய்ய முடியாது அம்மா! ஒவ்வொருநாளும் ஒவ்வொருவரிடமும் இடிபட்டுக் கொண்டும், நெரிபட்டுக் கொண்டும்..."

"வெளியில போய் வேலை செய்யிறதென்னால் தாலும் நடக்கத்தான் செய்யும்...நாங்கள் தான் "அட் ஜஸ்ட்" பண்ணி நடக்க வேணும்"

"அட்ஜஸ்ட்!" அம்மாவைப் பொறுத்த வரையில் எவ்வளவு பெரிய வார்த்தை. கிளாஸிற்கு போயிட்டு வரும் பொழுது ஒருமுறை மழைக்காக சங்கரின் குடைக்குள் ஒதுங்கியதுக்காக...அம்மா எப்படியெல்லாம் வாய்க்கு வந்தபடி திட்டினாள். "அம்மா நீயா ...நீயா அட்ஜஸ்ட் பண்ணி நடக்கச் சொல்கிறாய்? வறுமை உன்னைக் கூட இவ்வளவு தூரம் பேச வைக்குதா?"

தம்பி குமார்... தங்கை ரம்யா... பாபு...சுமதி......எல்லோரும் என்னை வெறித்துப் பார்ப்பதைக் கண்டதும் சாப்பிடாமலே கையைக் கழுவிக் கொண்டு கட்டிலில் போய் விழுகிறாள்.

எத்தனை வருடங்கள் உங்களுக்காக உழைத்தேன்? என்னைக் கொஞ்சம் ஓய்வெடுக்க விடுங்களேன். இந்த நெரிசலிலிருந்து... வேண்டுமென்றே உரசும் மனிதர்களிடம் இருந்து...கையைப் பிடித்து இழுக்கும் மனேஜரிடமிருந்து...கொஞ்சம் கொஞ்சம் ஆறவிடுங்களேன் எல்லோரிடமும் மாறி மாறி அடிபட்டு ரொம்பவும் களைத்துப் போய் விட்டேன் நான். ப்ளீஸ்...... ப்ளீஸ்......

வெளியில் வார்த்தைகள் வர முடியாமல் மனதினுள் நின்று போராடின.

"புத்தகத்தை படிச்சிட்டுக் கவனமாக எடுத்து வை என்று எத்தனை தரமடி சொன்னனான். எலி கடிச்சால் திரும்ப வாங்க இனிமேல் காசு வருமே!"

"சனியன் பாலை முதலிலே குடிக்கிறதுக்கென்ன? நித்திரையிலை தட்டி ஊத்திப் போட்டு நிண்டு முழி. அடுத்த மாதத்தில இருந்து அதுவும் இல்லைத் தெரியுமேடா?"

அவளிடம் கொட்ட முடியாத கோபத்தை சுமதியும்

பாபுவும் வாங்கிக் கட்டிக் கொள்கிறார்கள். தாயின் அடியைப் பொறுக்க முடியாமல் பாபு ஓவென்று கத்துகிறான்.

"அம்மா ஏன் வீணாக அவனைப் போட்டு அடிக்கிறாய் நான் வேலையை விடவில்லை"

படபட வென்று பெருமூச்சுக்கள் ஒன்றன் பின் ஒன்றாக ராகமிசைக்கின்றன. அவளது துயரத்தில் இளைப்பாறும் எத்தனை உள்ளங்கள். 'சுரேன் இவர்களையெல்லாம் விட்டுட்டு என்னால் அவ்வளவு சுலபமாக உங்களுக்கு மனைவியாகி விட முடியுமா?'



அடுத்த நாள் மாலை சுரேன் உற்சாகமாக அவளைச் சந்திக்க ஓடி வந்தான்.

"இன்று சம்பள நாள் வித்யா. ரெஸிக்னேஷன் லெட்டரைக் குடுத்திருப்பியே"

அவள் இல்லையென்பது போல் மெதுவாகத் தலையை ஆட்டினாள்.

"ஏன்...பச்சைக் காகிதங்களைக் கண்டதும் மனம் மாறிட்டுதோ"

அவள் பேசாமல் கடல் அலைகளை பார்த்துக் கொண்டிருந்தாள். எவ்வளவு தான் அடித்து அடித்து கரையை நோக்கி ஓடிவந்தாலும் கடலின் உள்ளேதான் எப்பவும் அதன் சீவியம்.

"நான் எவ்வளவு சொன்னாலும் ஏன் தான் நீங்கள் கேட்க மாட்டீங்களோ தெரியாது நேற்று வித்யா அக்கா வேலையை விடப்போறன் என்று சொன்னதும் என்னுடைய இதயம் ஒருமுறை நின்ற மாதிரி"

ரம்யாவின் குரல். அவள் இங்கு எங்கு வந்தாள்? யாரோடு கதைத்துக் கொண்டிருக்கிறாள்?

அவசர அவசரமாக வித்யா எழும்பிப் பார்த்த பொழுது படகின் மறுபுறம் அவளது தங்கை ஒரு வாலிபனின் தோளில் சாய்ந்தபடி-

ரம்யா எனக் கத்த வாயெடுத்தவள் தன்னுடைய நிலைமை நினைவுக்கு வர மெதுவாக அமர்ந்து ரம்யா பேசுவதைக் கேட்கலானாள்.

"ஸிஸ்டருக்கு பிறகுதான் எங்கடை வெடிங் என்று நான் கிழவியாகுமட்டும் சொல்லிக் கொண்டிருங்கோ"

"கோவிக்காதை ரம்யா, இன்னும் கொஞ்ச நாள்தான். உனக்கு வீட்டில் இருக்க போர் அடிச்சால் ஒருவேலையை எடன்"

"வேலையை இப்ப நினைச்சாலும் எடுக்கலாம் பிரதீப். நான் தான் எடுக்காமல் இருக்கிறன்"

"ஏன் ரம்யா"

"பின்ன என்ன......நான் வேலையை எடுத்ததும் அக்கா வேலையை விட்டுடுவாள்...... பிறகு சுமதிக்கு வேலை கிடைக்கும் வரைக்கும் என்ட சீவியம் ஒப்பீசும் வீடுமாகத்தான் இருக்கும்"

"அக்கா பார்த்த மாதிரி கொஞ்ச நாளைக்கு நீயும் பார்ப்பது தானே ரம்யா, காசும் உதவும்"

"உங்களுக்கென்ன விசரே.. ...அக்கா உழைக்கிறபடியால தான் அம்மா அவளின்டை கல்யாணத்தைப் பற்றி யோசிக்காமல் இருக்கிறாள்......நாளைக்கு நானும் வேலை எடுத்தன் என்டால் என்ட நிலைமையும் அது தான்...அக்கா உணர்ச்சியில்லாத ஜடமென்டால் நானுமே!"

'உணர்ச்சியில்லாத ஜடம் ...உணர்ச்சியில்லாதஜடம்'...

அன்றிரவு படுத்துக் கொண்டிருந்தவளின் மனதில் ரம்யாவின் வார்த்தைகள் மீண்டும் மீண்டும் இரைந்து கொண்டு...



# ஒரு பெண்ணின் கதை

(குறுங்காவியம்)

—— வாகரைவாணன் ——

காட்டுத் தீப் போல
கதை யெங்கும் பரவ
கூட்டமாய் மாணவியர்
குசுகுசுக்க லானார்
கேட்டறிந்த கன்னியர்
கேவியவள் அழவே
நாட்டத்தை மாற்ற
நல்லுரைகள் சொல்வார்!

கட்டுப்பாடு மிக்க
கன்னியர்கள் மடத்தில்
தட்டுப்பா டென்பேன்
தனி நபர் சுதந்திரம்!
பட்ட பாடிதனால்
பாவையவள் கோடி!
விட்டு விட என்ன
விளையாட்டா காதல்?

### காதலோ காதல்!

மாதாவின் ஆலய
மணிக் கூண்டுக் கோபுரம்
ஆதார மானது
அன்பர்கள் இருவர்க்கும்
காதோடு காதாய்
கதை பேசி மகிழ!
போதாத காலம்
போதகர் ஓர் நாள்,

கண்டு இதை உடனே
கன்னியர்க் குரைக்க
தண்டனை தான் இல்லை!
தையல் அவள் தன்னை
கொண்டு கொடுஞ் சொல்லால்
குளிப்பாட்டி விட்டார்
உண்டுறங்கு வோர்க்கு
உணர்ச்சிதான் ஏது?

அன்றிரவு முல்லை
அன்பனவன் நாடி
சென்றதிலை வெளியே
சிறைப்பறவை யானாள்
நன்றிதனை உணர்ந்த
நற் தோழி மூலம்
ஒன்றிரண்டு கடிதம்
உயிருக்கனுப்புவாள்!

பாலன் அவள் அன்பன்
பைத்தியக் காரனாய்
காலமது கழித்தான்
கண்களிலே அந்த
வேல்விழியே நின்றாள்
வெம்பி மனம் நொந்து
நூல் போல ஆனான்
நோய் கொடிது அன்றோ!

விடுமுறையும் வரவே
விலங்குகளும் உடையும்!
மடந்தை தன் இல்லம்
மறுநாளே சென்றாள்!
இடம் மாறினாலும்
இதயம் அவன் நினைவால்
கிடந்தாடத் துடிப்பாள்
கிளி மொழியாள் முல்லை!

### ஆற்றங்கரையினிலே!

உளமாறச் சிறிது
உப்பாற்றங் கரையில்
நிழல் தூவும் தென்னை
நெடுஞ் சோலை செல்வாள்
பழங்கால ஆறு
பரபரப் பின்றி
குளம் போலக் கிடக்கும்
குன்றாத அழகு!

காற்றென்னும் பெண்ணாள்
கல கலப்பாக
வீற்றர சாளும்
வெயில் கால வீடு!
போற்றும் நல் அமைதிப்
பூவையவள் என்றும்
ஏற்ற நல் இடமாய்
இருந்து வரும் இல்லம்!

(தொடரும்)

# 'இலக்கியங்களில் வாழும் இனிய தமிழ் மகன் கல்கி'

பொன்னி வளவன்



இவ்விருபதாம் நூற்றாண்டின் தமிழ் இலக்கிய வரலாற்றில் புரட்சி வித்திட்டவர்களுள் முதலில் எண்ணத் தகுந்தவர் அமரர் பேராசிரியர் கல்கி ரா. கிருஷ்ணமூர்த்தியாவர். தமிழ் எழுதுவதும் படிப்பதும் இழுக்காறு என்ற எண்ணமும், தமிழில் நாவல்களும், கரடு முரடான பாக்களையும் தவிர வேறு எதுவும் எழுத இயலாது என்ற கொள்கையும் நிலவி வந்த காலத்தில், தமிழில் எதனையும் திறம்படச் சுவை குன்றாமல், மனதில் பதியும்படி எழுதலாம் என்பதற்கு ஓர் எடுத்துக் காட்டாக விளங்கியவர்கள் கல்கி அவர்களே. கட்டுரை, சிறுகதை, பொருளாதாரம், அரசியல், விமரிசனம், பயணம் அனைத்தையும் சுவைததும்ப, நெஞ்சத்தை ஈர்க்கும் வகையில் தமிழில்—அதுவும எளிய அன்றாடத்தமிழில் வடித்தவர் அமரர் கல்கியே.

அன்னாரது சிறுகதைகளும், நாவல்களும் சிறந்த வருணனைகளையும், உயிர்த்துடிப்புள்ள கதாபாத்திரங்களையும், கொண்டு விளங்குகின்றன. வாழ்க்கையில் காணப்படும் சிக்கல்கள் சிலவற்றை உட்பொருளாகக் கொண்டு சுவையுள்ள திருப்பங்களை அமைத்து கதையினை இனிமையுறக் கொண்டு செல்லும் வகை படித்து இன்புறற்பாலது! இவரது ஒவ்வொரு படைப்புமே காலத்தால் அழியாத —தமிழ் உள்ளளவும் நிலைத்து நிற்கும் அமர சிருஷ்டிகளாகும். இவரது தமிழ் நடையின் சிறப்பினையறிந்து பலரும் "கல்கி நடை" என்றும் "துள்ளுந் தமிழ் நடை" என்றும் சிறப்பித்துக் கூறுவது மறக்க முடியாதது.

நாட்டு விடுதலை என்னும் மாபெரும் வேள்வித்தீயில் புடமிடப்பட்ட தேசபக்தரான கல்கி தனது உள்ளத்து உணர்ச்சிகளைக் கதாபாத்திரங்களின் வாயிலாக வெளிப்படுத்தியுள்ளார். நாடு விடுதலை பெற்ற பின்னர் எழுத்துக்கு எவ்விதமான தடையும் கட்டுப்பாடுமற்ற சுதந்திரமான சூழலில் எண்ணியதை எண்ணியாங்கு வெளியிட வாய்ப்புக் கிட்டிய பிறகு உருவாகிய நாவல் 'அலை ஓசை'. வரலாற்று நாவல் துறையில் ஊறித் திளைத்த கல்கி அலை ஓசையையும் வரலாற்று நாவ

லாகவே படைத்தளிக்க எண்ணங் கொண்டார். பழங்கால வரலாற்றை ஆதாரமாகக் கொண்டு எழுதப்படுபவை மட்டும் வரலாற்று நாவல்கள் அல்ல. நிகழ்கால நிகழ்ச்சிகளைப் பின்னணியாகக் கொண்ட நாவல்களும் வரலாற்று நாவல்களே. இந்தக் கண்ணோட்டத்தில் அலையோசை நாவலை சமகால வரலாற்று நாவலாக ஏற்கலாம். மறைமுகமாகப் பழைய வரலாறுகளைக் கூறித் தேசிய எழுச்சியூட்ட முனைந்த போதெல்லாம் கிடைக்காத மனநிறைவை —ஆத்ம திருப்தியை நேரடியாக அலையோசை வாயிலாகக் கூறியபோது கல்கி பெற்றிருக்க வேண்டும்.

சேலத்துக்கருகில் ஒருசாலையில் 'பொய்மான் கரடு' என்று ஒரு அறிவிப்புபலகை போட்டிருக்கிறார்கள். அங்குள்ள புதுமை என்னவென்று கேட்கிறீர்களா? கல்கி அதைப் பற்றி எழுதினார்! ஆம்! கல்கி யாரைப்பற்றி எழுதினாரோ அதற்கெல்லாம் நல்ல யோகம் அடித்தது. அவர் எது எழுதினாரோ அதெல்லாம் இனித்தது! அவர் பேனாவுக்கு அத்தனை சக்தியிருந்தது! மாரப்பபூபதியையும், வள்ளியையும் அவள்சுடும் கேழ்வரகு அடையையும், சிவனடியாரையும், சுகரையும், வேலெறியும் பரஞ்சோதியையும், சித்திரக் குள்ளனையும், சூரியாவையும், சீதாவையும், துரைசாமி ஐயரையும், அவர் மனைவியையும், சிவகாமியையும், மறந்துவிட முடியுமா? "முன்னம் அவனுடைய நாமம் கேட்டாள்" என்ற பாடலைக் கேட்கும் போது, சிவகாமி சிவன் கோவிலில் இறைவன் சந்நிதியில் நடனமாடி அவனுடன் ஐக்கியமாகும் உருக்கமான அற்புதக் காட்சியல்லவா கண்முன் மலர்கிறது. இத்தனைக்கும் அந்தப் பாடலை அப்பர் எத்தனை நாளுக்கு முன்பே பாடித்தான் வைத்துவிட்டுப் போனார். ஒரு வேளை அப்பர் கல்கியின் சிவகாமிக்காகத்தான் முன்பே பாடிவிட்டுப் போனாரோ? ஒரு வீரன் குதிரைமீது வீற்றிருக்கிறான்! "விந்தியத் தேவரீ உனது துயரம் நிறைந்த எண்ணங்களை இப்போது நாங்கள் கலைக்க, விரும்பவில்லை. போய்வா உன்னைப் பிறகு சந்திக்கிறோம்!" என்று கல்கி எழுதும் போது நம் கண்களில் நீர் தேக்கிடுகிறது.

கல்கியின் வர்ணனைகள் மிகவும் பிரசித்தமானவை. அந்த வர்ணனைகளைப் படிக்கும் போது ஏதோ அவற்றை நம் கண் முன்னே காண்பது போலிருக்கும், சிவனடியார் தனது உடைகளைக் களைந்து ஐயனார் கோவிலில் நிறுத்தப்பட்டிருக்கும் மண் குதிரைகள் ஒன்றின் உள்ளே வைக்கிறார். அதைப்படிக்குந் தோறும் நமது கிராமத்து ஐயனார் கோவில் அப்படியே கண்முன் எழுகிறது. நந்தினியும் அவள் பல்லக்கும், நரசிம்ம வர்ம பல்லவரும் அவர் காதல் கடிதம் வைக்கும் மரப்பொந்தும், பார்த்திபனும் அவர் சித்திரக் கூடமும் பொன்னனும் அவன் படகுத் துறையும், இறந்துவிட்டவையென்று யாராலும் சொல்ல முடியுமா? அதற்கெல்லாம் உதாரணம் தர முடியாது ஏனெனில் அவர் எழுதியவற்றையெல்லாம் வாழ வைத்தார். அலை ஓசை சீதாவின் காதில் மாத்திரமா கேட்டது? எல்லோர் காதிலும் இதயத்திலுமல்லவா கேட்டது. ஹாஸ்யம், உருக்கம், வருணனை என்ற எல்லாவற்றையும் சேர்த்து ஆயனச் சிற்பி மகள் சிவகாமியைப் பற்றி எழுதிய கல்கி நாட்டிய மறுமலர்ச்சியை நாட்டில் தோற்றுவித்ததை எவராலும் மறக்க முடியாது. திரு மு. கருணாநிதி ஒருதரம் எழுதினார் தலைப்பு: 'அலை ஓசைக் காரரின் அலறல்' என. அலை ஓசை எவ்வளவு தூரம் சிந்தையைக் கவர்ந்திருந்தால் கல்கிக்குப் போய் 'அலை ஓசைக்காரர்' என்ற அடைமொழியைக் கொடுத்திருப்பார். கல்கி ஒரு துணிச்சல் காரர். அதே சமயத்தில் ஒரு பெருமகன். பெருந்தன்மை மிக்கவர் காமராஜரை ஒரு சமயம் கண்டித்தவர் பின் தானே அதை வாபஸ் வாங்கிக் கொண்டார். மாற்றான் தோட்டத்து மல்லிகைக்கும் மணம் உண்டு என்பதை ஒப்புக் கொள்ள மறுப்பதில்லை அவர். அண்ணாதுரையின் ஓர் இரவு நாடகத்தை பார்த்து விட்டு "ஒவ்வொரு நாடகத்தின் போதும் தலைமை வகிப்பவர்கள் நம் நாட்டில் ஒரு இப்சனில்லை. ஷா இல்லை என்று ஒருபாட்டம் அழுவார்கள் இந்நாடகத்தைப் பார்த்த பிறகு இதோ இருக்கிறார் நம் நாட்டில் ஷா என்று சொல்ல விரும்புகிறேன்!" என்றார். பிடிக்காதவர்களிடத்து நல்ல குணம் இருந்தால் அதைப் புகழப் பெருந்தன்மை வேண்டும் அதுதான் பத்திரிகா தர்மம். அதைக் கல்கி நன்றாகக் காட்டினார். மாந்தருக்குள் தெய்வம் என்றால் நாம் காந்தியையும், மனிதருக்குள் ஒரு மாணிக்கம் என்னும் போது நேருவையும், தமிழ் நாட்டின் தவப்புதல்வர் என்னும் போது காமராஜரையும் தான் எண்ணிக் கொள்கிறோம். ஏனெனில் அந்த அடை மொழிமூலம் அவர்களைக் கல்கி அறிமுகம் செய்துவைத்தார்.

கல்கியவர்கள் கல்லூரியில் உயர் வகுப்பில் கல்வி பயிலும் காலத்தில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்டுக் கல்லூரிப் படிப்பை கைவிட்டார். தேசப்பணியால் அவர் சிறை சென்றதுமுண்டு. அவ்வாறு அவர் தேசப்பணியாற்றும் காலத்தில் எழுத்துலகிலும் ஆக்கப்பணி செய்ய ஆவல் கொண்டார். அப்பொழுது அவருக்கு வழிகாட்டியாய் இருந்து துணைபுரிந்தவர் வி. கல்யாண சுந்தரம் முதலியாராவார். முதலில் வி. க. அவர்களின் 'நவசக்தி' என்னும் இதழிற்குப் பின்னர் 'ஆனந்த விகடன்' இதழிற்கும் ஆசிரியராய் கடமையாற்றினார். சுற்றில் தமது புனை பெயராகிய 'கல்கி' என்னும் பெயர் தாங்கிய இதழினைத் தொடங்கி அரிய பணிகள் பல புரிந்தார்.

## காவலூருக்கு எமது வாழ்த்துக்கள்!

கடந்த 23—11—80 ல் இல்லற வாழ்வில் பிரவேசித்துள்ள பரிசு எழுத்தாளர் திரு. காவலூர் எஸ். ஜெகநாதன் அவர்களுக்கும் அவர் தம் துணைவியாருக்கும் எமது நல்வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

—ஆசிரியர்—

இவரது புனை பெயருக்கான காரணங்கள் பல கூறப்பட்டாலும் உண்மையானது —கல்கியே கூறுகிறார்—"நான் கல்கி என்ற புனை பெயரில் முதன் முதலாக எழுதிய கட்டுரையைப் படித்தவர்களுக்கு இந்தப் புனை பெயரின் அர்த்தம் புரியும். நான் பழமையான சம்பிரதாயங்களையும், அர்த்தமற்ற பழக்க வழக்கங்களையும் ஜோசியம், சகுனம் என்பவற்றையும் விட்டொழித்துப் புதுமை யுகத்தை மலரச் செய்யவேண்டும் என்ற கருத்தை அந்தக் கட்டுரையில் வெளியிட்டேன். இதுவரை சழிந்துபோன யுகங்களைத் தவிர்த்துப் புதிய யுகத்தைச் சிருஷ்டிக்கப் போவதாக ஒவ்வோர் இளம் எழுத்தாளரும் எண்ணிக் கொண்டு எழுதுவது இயற்கை. அது போலவே நானும் அந்தக் காலத்தில் ஒரு புது யுகத்தைச் சிருஷ்டிக்கப் போகும் பெரு வீரனாக நினைத்துக் கொண்டு பகவானின் பத்தாவது அவதாரமும் புது யுகத்தைக் குறிப்பதுமான கல்கி என்ற புனை பெயரை அப்போது வைத்துக் கொண்டேன்." என்று இது தவிர வேறு புனை பெயர்களிலும் அவர்எழுதினார் அதனை அவரே குறிப்பிடுகையில்—"தும்பியாக இருந்து தமிழ்த் தேனியாக மாறி ரீங்காரம் செய்து கடைசியில் கல்கியானேன். எனக்குக் கர்நாடகம், லாங்கூலன், அகஸ்தியர், ரா. கி., யமன், விவசாயி, பெற்றோன் என்ற புனை பெயர்களுமுண்டு." அத்துடன் குகன், தமிழ் மகன் என்ற புனை பெயர்களிலும் எழுதினார். அவரது பட்டியற்படி பத்துப் புனை பெயர்கள். ஒரே கல்கியின் தசாவதாரம். இத்தனை புனை பெயர்களை எந்த எழுத்தாளனும் கொண்டதில்லை.

அண்ணாமலைப்பல்கலைக்கழகத்தில் தெரியப்பட்ட அகில உலக எழுத்தாளர் மகா நாட்டில் கல்கியே தலைமை வகித்தார். யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற நான்காவது தமிழ் விழாவை நடாத்தி வெற்றி கண்டார்.

பேராசிரியர் ரா. கி. ஈழத்தமிழர் பிரச்சினையை நன்கு அறிந்தவர். ஈழத்திற்கு வந்த போது தந்தை செல்வாவை அவர் சுதந்திரன் அலுவலகத்திற்குச் சென்று சந்தித்தார். தமிழர் பிரச்சினையைப் பற்றி அவர் தெளிந்த கண்ணோட்டத்தில் எழுதினார். அவர் மறைந்த பின்னும் கல்கி இதழ் தமிழர் பிரச்சினையில் ஆர்வம் காட்டி வந்துள்ளது. தனது முதலாவது இலங்கைப் பயணத்தின் போது யாழ்ப்பாணத்தை அணுகுகையில் அந்தப் பக்கங்களை முன் எப்போதோ பார்த்தது போலிருக்கின்றது என்று கருதினார். அதற்குக் காரணம் அவர் பிறந்து வளர்ந்த பொன்னி நாட்டைப் போல் அது காட்சியளித்ததே என்பதை உணர்ந்தார், "தஞ்சாவூர் ஜில்லாவில் கடற்கரையை அடுத்த பிரதேசங்கள் இப்படியே தான் இருக்கின்றன" என்றார். அத்துடன் கல்கி ஓரிடத்தில் குறிப்பிடுகிறார்—பேசுகிற தமிழிலும் இனிமையுண்டு என்பதைக் காண வேண்டுமானால் நாம் தெற்கு நோக்கிச் செல்ல வேண்டும். பழகு தமிழின் இனிமையைத் தமிழ் நாட்டில் திரு நெல்வேலி ஜில்லாவில் தான் ஒருவாறு உணர்கிறோம். ஆனால் அதன் இனிமையைப் பூரணமாக அனுபவிக்க வேண்டுமானால் யாழ்ப்பாணத்திற்குச் செல்லுங்கள்" என்கிறார்

இவ்வாறு தமிழ் ஈழத்தைத் தனது தாயகத்திற்கு நிகராகவும், ஈழத் தமிழரைத் தன் உற்றார். உறவினராகக் கருதிப் போற்றினார். ஈழத் தமிழருக்கும் கல்கிக்கும் இடையே தோன்றி வளர்ந்த உறவு புனிதமானது. இலக்கியத்திற் கலந்த இனிய நட்பு அது. பொன்னியின் செல்வனில் இதன் இறுக்கத்தை நன்றாக உணரலாம்.

கல்கி அமரரானது 5. 12. 1954 இல் அவர் இப்பூவுலகில் வாழ்ந்தது 54 வருடங்கள்தான். ஆனால் அவர் தமிழ் இலக்கியத்தில் ஆற்றிய சேவைகள் அளப்பரியது.

மதிப்புக்கு அடங்காத சொத்து ஒன்றை நம் எல்லோருக்கும் வழங்கி இருக்கிறார் அவர். அதுதான் அவர் படைத்த இலக்கியச் செல்வம்.

குறைவில்லா இச் செல்வத்தில் அவர் நிறைவாக வாழ்கிறார். இச் செல்வத்தை அனுபவிப்போரின் இதயத்தில் வாழ்கிறார், அவருடைய வழியிலே நடக்கும் இலக்கியப் பரம்பரையிலே வாழ்கிறார்.

அவர் இயற்றிய பாடல்களில் இழைந்து வாழ்கிறார்.

அன்னாரது அமர சிருஷ்டிகளைப் படிக்கும் ஒவ்வொரு வாசகன் உள்ளத்திலும்,

அலைகடலும் ஓய்ந்திருக்க அகக்கடல்தான் பொங்குவதேன்?
நிலமகளும் துயிலுகையில் நெஞ்சகந்தான் பதைப்பதுமேன்?"

என்ற ஏக்கம் நிறைந்த, உள்ளத்தை உருக்கும் இதய கீதமே ரீங்காரித்துக் கொண்டிருக்கும்.

இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு!

செந்நீர் வியர்வை ஆகி நிலத்தில்!
சிந்திட வைக்கும் வுழைக்கும் சிறப்புடைத் தோழர்!
கண்ணீர் சிந்திட கஞ்சிக் கிரந்திட!
களியர் நெஞ்சினர் பணமுத வள்ளியர்!
பன்னீர் குளித்தாலும்! பஞ்சணைத்துயிலலும்!
இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு!

வரண்ட நிலத்தை வளமுடைத் தாக்கி!
வாழ்வை உயர்த்திட உழைத்திடும் கூட்டம்!
சுரண்டற் புலியினர் சூரத் தனத்திடை!
சுருண்டு வீழ்ந்து சுழலும் பொல்லா!
இருண்ட காட்சி இருந்திடல் கண்டு!
இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு!

சாதிக் கொடுமை சமத்துவம் படுகொலை!
சரித்து வீழ்த்திச் சாடும் இனவெறி!
ஆதித் தமிழ்மொழி! அழிந்து அவ்வினம்!
அடிமைத் தளையிடை அவதிப் படுந்துயர்!
ஊதிப் பெருத்திட உணர்வை நெரித்திட!
இளைஞர் நெஞ்சில்! கனலும் நெருப்பு!

---

## வேளை பிறந்தது!

— அ. நாகலிங்கம் —

முத்துக் குளித்திட வேளை பிறந்தது
முன்னெழுந் தோடி வாருமெனும்
சத்தமெழுந்தது! வானும் அதிர்ந்தது!
சவ்வு கிழிந்திரு காதும் பெயர்ந்தது!
மெத்தை விரிப்பினில் கூவியழைத்தவர்
மீண்டொரு வித்தை காட்டுவதால்,
சித்தங் கலங்கிட சிந்தனைப் பொடிபட
செய்வதறியாது திகைத்து நின்றேன்!

நித்தியக் கனவுகள் நனவாகும்
நேரம் வருவதாய்த் தூதுரைத்து
பத்தியங் காத்தது போது மெனப்
பாட்டுக்களாயிரம் பாடி நின்றார்!
கத்திப் பறந்த காகங்களாய்க்
காட்சியளித்திடுங் கூட்டமின்று!
புத்தி மழுங்கியே புதிய குரல்
புகுந்து கேட்டு திகைத்துநின்றேன்!

---

கைகடிக்கத்
திணறுகையில்
ஐயனே!
என்ன?
மேலும்
ஐம்பதா!
ஐயகோ—
'பிச்சை
வேண்டாம்
நாயைப்
பிடி!'

---

## ஏழைகள்

—அக்கரைப் பேரின்பம்—

வாழ்க்கைத் தண்டவாளத்தில்
இனிதே உலாவரக்
கண்ணீர் வடிப்பவர்கள்
இவர்கள்—
துன்பக் குரங்கின்
கைக்கெட்டிய பூமாலை!
நினைவுகளைக் கனவாக்கி
நிதமும் ஏங்கும்
பரிதாப ஜீவிகள்
இவர்கள்—
பழகுவதற்கு இனிய
பண்பாட்டுக் குழந்தைகள்.

## ஒரு கேள்வி!

(கதிர் மாணிக்கம்)

கவிதை இலக்கணம்
கனவிலும் அறியேன்!
எதுகை மோனை
எது எனத் தெரியேன்!
ஆனாலும்—
கவிதை நயமறிவேன்!
புதுமை! புதுமை! என
புதுக்கவிதை பலநூறு
புனைந்து குவிக்கின்றீர்!
புலவீரே கேட்கின்றேன்!
புதுக்கவிதை பிறந்தவிதம்
புகலுவீரோ?

---

## நடிப்பு

—மருதூர் இசைவாணன்—

கட்டில் கதிரைகள் பலவுண்டு—கண்
கவரும் அலுமாரி சிலவுண்டு;
வட்டம் போட்டுப் பலபேர்கள் —இவரை
வணங்கி நிற்பார் வறியோர்கள்!

இடத்தைப் பார்ப்போர் திகைப்பார்கள்' — ''கல்வி
இருப்போன்'' எனவும் நினைப்பார்கள்!
நடத்தை உடைகள் பாவனையில் — இவர்
'நல்லோர் அறிவாளி' போலிருப்பார்;

எண்ணும் எழுத்தும் இவரறியார் — மக்கள்
எவரின் பசிபிணி இவருணரார்!
கண்ணும் கருத்தும் காசெனுவார் — சுற்றம்
கஞ்சியின்றிச் சாகினும் கவலைகொளார்!

உண்ணும் வேளையில் ஒளித்திருப்பார் — வாய்
உருசிக்கு மேலாய் உணவடைப்பார்!
மின்னிடக் கருமேனி அலங்கரிப்பார் — பிறர்
மின்னுதல் கண்டால் மிக எரிவார்!

உழைப்பாளர் கூலியை அரித்தெடுப்பார் — விலை
உற்பத்திப் பொருட்களில் உரித்தெடுப்பார்!
உழைப்பாளர்க் குதவுமாப் போல்நடிப்பார் — கலை
உலகினர் இவர் மோச மிசைத்திடுவார்!

---

## கன்னிப் பூ!

—செல்வி: தே: இராக்கினிதேவி—

கதிரவன் வரவு கண்டு
கணக்கிலா மகிழ்வு கொள்ளும்
கமலத்தின் இதழ்கள் போல்
காதலன் வரவு தேடி
காலமெலாம் காத்து நிற்கும், நின்று
களிப்புடன் வாழத் துடிக்கும்
கருகாத பூவது கன்னிப்பூ!

# மணிக்கவிதை மலர்ச்சரங்கள்

## அழைப்பிதழ்!

—மா. இராசலிங்கம்—

வேதனைக் கலா மன்றத்தினரின்,
கவலை விழாவையொட்டி,
துயர்க் கலைவிழாவில்;
சோக நிகழ்ச்சிகளும்,
அழுகையிசைக் கச்சேரிகளும்,
ஏக்கப் போட்டிகளும்,
பெருமூச்சுப் பரிசில்களும் வழங்கப்படும்,
இன்னல் இடர் பட்டோரே,
துன்பச் சுமையுடனே திரண்டு வருக!

---

## இளைஞர் நெஞ்சிற் கனலும் நெருப்பு!

“நிலாதமிழின்தாசன்”

சத்தியம் செத்துச் சாக்கடை வீழ்ந்து!
சமத்துவம் சரிந்து சேற்றினில் ஆழ்ந்து!
நித்திரைப் பாயில்! நீதி படுத்து!
நிலத்திடை மாந்தர் நிம்மதி விடுத்து!
இத்தரை இருண்ட இழிநிலை கண்டு!
இளைஞர் நெஞ்சில் கனலும் நெருப்பு!

## மர்மம்!

—பாலா அசோகன்—

இன ஐக்கியம்
என்று ஓலமிடும்
ஆளும் கட்சியினர்
இடையிடையே
துட்டகைமுனுவை
நினைவு கூர்வதின்
மர்மம் என்னே?

---

## ‘பிச்சை வேண்டாம்’

-ஆ. இரத்தினவேலோன்-

ஐம்பது
கூடிற்று—
ஐம்பொருளும்
ஐம்பத்தைந்து
கூடையிலே,
அடுக்களைப்
பொருள்
யாவும்
‘தலை தெறித்ததில்லை’
யென்னு
[illegible]கடிக்கத்
திணறுகையில்

## குலங்கள் என்ன செய்யும்!

— அ. கௌரிதாசன் —

அத்தைமகள் முறையெனக்கு அழகென்று
பெயருடையாள்
பதினெட்டு வயதாகப் பருவமுற்ருள்!
முத்தமிடத் தகுந்த கன்னம் கொண்டாள்
முழுமதியின் வடிவாக வதனம் பெற்ருள்!
நித்தமவள் பள்ளிக்குச் செல்லும் வேளை !
நீட்டுகிருள் கடிதமெனும் காதல் ஏட்டை
புத்தகத்தில் காணுத தத்துவங்கள்
பூவையவள் படைப்பினிலே இருத்தல்
கண்டேன்

நித்திரையில் கூடஅவள், நினைவு வந்து
நிம்மதியைக்கெடுக்கிறதே; என்ன செய்வேன்?
சித்தமினித் தாங்காது பொறுத்திருந்தால்
சேர்வதுதான் கன்னியவள் இளமை கொள்ள
பத்தாகப் பலசொல்வார் என்சுற்றத்தார்
பார்க்கிறேன் அவர்க்காக; இல்லையென்ருல்
கொத்திடுவேன்! கொவ்வைநிகர் கன்னம்தன்னை
கோத்திரங்கள் குலங்களெலாம் என்ன
செய்யும்

---

## நடிப்பு

# தர்ம-அதர்மங்கள்

## தமிழ்ப்பிரியா



பாராட்டுப் பரிசு பெற்ற சிறுகதை

அவனுக்கு நினைக்க நினைக்க பிரமிப்பாக இருந்தது. பதினைந்து வருடங்களுக்குமுன், அவன் பத்துவயதுச் சிறுவனாக இருந்த போது......ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் அம்மாவோடு அந்த முருகன் கோயிலுக்குப் போவான். ஆகக்கூடினால்......இருபது பேர்கூட பக்தர்களாக தரிசிக்க வராத இந்தக் கோயிலிலா...இன்று இப்படி...ஒவ்வொரு வெள்ளிக்கிழமையும் சனங்கள் வெள்ளம் போல திரம்பி வழிகின்றார்கள்; எண்ணிப் பார்க்கவே மனம் மலைத்துப் போனது அவனுக்கு.

அவனின் அம்மா முன்பு எல்லாம் அடிக்கடி சொல்லுவாள்: "உன்ரை வயதில் நானும் அம்மாவோடை இந்தக் கோயிலுக்கு வாற காலத்திலை.........இந்தக் கோயில் இப்பிடி எல்லாம் கட்டப்படேல்லை. நாலு கப்பு நட்டு .......ஓலையாலை கூரை போட்டுத்தான் இருந்தது. இப்பதான்... இரண்டு......மூன்று வருஷமாய் தூண் நிறுத்தி, ஓடு போட்டு... இவ்வளவு வடிவாய் கட்டியிருக்கினம்...!" என்று.

அவன் சின்னப் பிள்ளையாக இருந்தபோது கூட சிறிய கோயிலாக இருந்த முருகன் கோயில்.........இந்தப் பதினைந்துவருஷ இடைவெளியில் எவ்வளவு பெரிய கோயிலாகமாறிவிட்டது! வியக்கத்தக்க மாற்றம் தான். வசந்த மண்டபம் கட்டி......, புதிதாக இன்னும் சில தெய்வஉருவங்களை நிலைநாட்டி............ புதிய தேர் செய்து......... இப்போ கோபுரம் கட்டுகின்ற பணிகூட அதிவேகமாக நடந்து கொண்டிருக்கிறது என்றால்............ முருகா! உன் கருணை தான் என்னடா!

இந்த முருகன் கோயில் இவ்வளவு தூரம் முன்னேற்றத்திற்கு வந்திருக்கிறது என்றால்.........உண்மையில் அதற்குக் காரணம் பக்தர்கள் தான். புதிய முருகன் உரு செய்ய... தேர் செய்ய........., கோபுரம் கட்டவென்று.........பக்தர்கள் மன நிறைவோடு அள்ளிக் கொடுத்தார்கள். சளைக்காது வாரி வழங்கினார்கள். முருகன் மீது அவ்வளவு நம்பிக்கை மக்களுக்கு.

சுமார் பத்து வருஷ எல்லைக்குள் தான் இந்த முருகனின் பெருமை ஈழப்பரப்பு முழுவதும் புகழ் பரப்பிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு வெள்ளியும் தேர்த்திருவிழா மாதிரி மக்கள் வந்து தரிசிக்கிறார்களென்றால்......... முருகன் மீது அவர்களுக்கு உள்ள பக்தியை நம்பிக்கையை வார்த்தையால் எப்படிச் சொல்வது? அப்பாடா! சனங்கள் என்ற சனமா? அதிலும் பெண்களின் தொகைதான் எக்கச்சக்கம்.

சும்மா சொல்லக் கூடாது. இந்தத் தலத்தில் கால் வைத்ததுமே உண்மையில் மனம் ஒரு பக்திப்பரவசத்தில் தான் சிலிர்த்துப் போகும். இத்தனை பெண்கள் திரளாகத் தரிசிக்க வருகிறார்களே......ஒரு ஆணின் பார்வைகூட அந்தப் பெண்கள் பக்கமாக அலைவது கிடையாது.

காதல் ஜோடிகள் கூட சந்தித்துக்கொள்வது கிடையாது. ஆனால் சில வேளைகளில்— இந்தப் பிரதான வெள்ளிக்கிழமையில் பெண்பார்க்கும் படலம் மட்டும் நடப்பதுண்டு. அதுவும் வெளி வீதியில் தான். இதை ...ஒரு குறையாகச் சொல்ல முடியாது. ஏனென்றால்... பெண்கள் எல்லோரும் கல்யாண முருகனைத் தான் (வள்ளி-தெய்வானையுடன் வீற்றிருக்கும் முருகன்) சுற்றிச் சுற்றி... நிறைய நேரம் நின்று வணங்குவார்கள். அதனால் தான் பெண்களுக்கும் கல்யாண வரத்தை மள மள வென்று அள்ளி வழங்குகின்றான் இந்த இளமுருகன்.

அவனுக்கும் இந்த முருகன் மீது அபார நம்பிக்கை. சின்ன வயதில் இருந்து இடைவிடாது அவன் முருகனை வழிபட்ட பலன் தான்...எத்தனையோ கஷ்டங்களுக்கு மத்தியிலும் கூட படித்து ஒரு டாக்டராக வந்திருக்கிறான். அவன் ஊரோடு டாக்டராகப் பணிபுரிய வந்த பின்பு தவறாமல் ஒவ்வொரு வெள்ளியும் இரவுப் பூசைக்கு வருவான்.

"இப்பிடி பக்தர்கள் எல்லாம் சரம்சரமாய்...... வந்து சொரிகின்ற இங்கேயா.........? இந்தக் கோயிலிலா இப்படி எல்லாம் நடக்குது? எப்ப தொடக்கம் இந்த ஆரம்பங்கள்!" அவன் தனக்குள்ளே கேட்டுக்கேட்டுப்பதில் கிடைக்காமல் அலைந்தான்.

அந்தச் சனக் கூட்டத்திற்குள் நெரிபட விரும்பாமல் ஓர் ஓரமாக ஒதுங்கி நின்று

இவற்றை எல்லாம் கவனிக்கும் போது.........மனத்துள் சிறிய தாய்...... —முள் தைத்த வேதனையாய் ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு கிளம்பும் அவனுக்கு.

"இவற்றையெல்லாம் மற்றவர்களும் கவனிப்பார்களா?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்வான். தெய்வ தரிசனத்திற்காக இங்கே வந்து இப்படியெல்லாம் ஆத்திரப் படுவது மகாபாவம் என்பது அவனுக்குத் தெரியும். ஆனால்!.........

பேரும், புகழும், வருமானமும் உயரஉயர ஆலயத்தின் அகங்காரமும் (கோயில் பொறுப்பாளருக்கு) உயருமா? அப்படித்தான் இருக்க வேண்டும். ஆனால்......... இவற்றையெல்லாம் இவன் மட்டும்தான் — ஆக இவன் மட்டுந்தான் கவனித்து தன்னுள் வெந்து போகின்றானா? மற்றவர்கள்— ஆயிரக்கணக்கான பக்தர்கள் இவற்றைக் கவனித்த தாகவோ...... மனத்திற்குள் என்றாலும் குமுறுகின்ற பிரதிபலிப் பையோ..........அவனால் காண முடியவில்லை. ஒருவேளை தெய்வ சன்னிதானத்தில் அப்படி மனதிற்குள் என்றாலும் குமைவது தவறு என்று வீட்டிற்குப் போய் இதுபற்றிக் கதைப்பார்களோ? அல்லது.... அதை எல்லாம் தெய்வ வாக்காக எண்ணி கவனத்தில் கொள்ளாமல் தவிர்த்து விடுவார்களோ.....என்னவோ......!

ஒவ்வொரு வாரமும் வந்து சொரியும் பக்தவெள்ளத்தைக் கட்டுப்படுத்தாமல்.....கோயில் தொண்டு செய்கின்ற அந்த இளைஞர்கள் எல்லாம் திக்கு முக்காடிப் போவதென்னவோ உண்மைதான். எல்லோரையும் அமைதியாக நிலத்தில் இருக்க வைத்துத்தான் பூசை பார்க்கச் செய்வார்கள். அதனால் பலர் தீப ஆராதனையைப் பார்த்துப் பரவசப்பட முடிகிறது. இது போற்றுதற்குரிய ஒழுங்குதான்.

வசந்த மண்டபத்துப் பூசை ஆரம்பமாவதற்கு முன்பு கோயில் பொறுப்பாளர் திருவாளர் சிவசங்கரன் அவர்கள் பத்து நிமிஷம் பக்தர்களுக்காக உரையாற்றுவார். 'உரை' என்றவுடன் முருகனைப்பற்றிய 'பிரசங்கம்' என யாருமே எண்ணிவிடக் கூடாது. இறைவனைத் தரிசிக்கும் முறை......... அது......இது......என்று விரலை மடித்து ஒவ்வொன்றாக எண்ணலாம். முதலில் வழமையாக ஒலிக்கும் அதே பல்லவி......!

"நான் ஒவ்வொரு முறையும் கவனிக்கிறன். குறிப்பிட்ட ஒரு சிலர்தான் எப்போதும் முன்னுக்கு வந்திருந்து பூசை பார்க்கிறார்கள். அப்பிடி அவர்கள் செய்யிறது தவறு. அதனாலை... எப்போதும் குறிப்பிட்ட சிலரே முன்னுக்கு நிற்காமல் மற்றவர்களையும் விட வேணும்......!"

ஆரம்பத்தில் இந்த வார்த்தைகள்—கவனத்தைக் கவர்ந்தும்......அதை மனதில் தங்க வைக்கவில்லை அவன். அதை ஒரு அலட்சியத்தோடு—அர்த்தத்தை ஊன்றிப்பார்க்காமல் விட்டு விட்டான். நாளாக நாளாக....அந்த வார்த்தைகள் நேராக இதயத்தில் விழுந்து உலுப்பியபோதுதான்...... மளமளவென்று கொட்டுகின்ற தேனீயின் வதைப்பாய்........ கோபம் பொங்கிக் கொண்டு வந்தது அவனுக்கு.

"மிஸ்டர் சிவசங்கரன்! நீர் கோயிலின் பொறுப்பாளராய் இருக்கலாம். அதுக்காக எப்போதும் முன் வரிசையில் இருந்து பூசை பார்க்கிறவர்களை பின்னுக்குப்போய் நில்லுங்கோ என்று சொல்ல உமக்கு எந்த அதிகாரமும் கிடையாது. கடவுள் சௌக்கியமாக இருக்கிறாரோ என்று பார்த்திட்டுப் போறதுக்காக சனங்கள் கோயிலுக்கு வாறேல்லை. வீட்டில் எவ்வளவோ வேலைகளையெல்லாம் ஒதுக்கி....சிரமப்பட்டு....பூசை பார்க்க அவர்கள் நேரத்துடன் ஓடி வருகினம் என்றால்...அவர்களுக்கும், மனதிலை என்னென்ன துயரங்களோ..........! சஞ்சலங்களோ.........! வேதனைகளோ... பூசை பார்க்க விரும்புகின்ற ஆரெண்டாலும் நேரத்துடன் வந்து முன்னுக்கு இருந்து கும்பிடட்டும். அதுக்கு கட்டளையிட உமக்கு உரிமையில்லை. மற்றவர்களைச் சொல்லிப் போட்டு......கோயில் பொறுப்பாளர் என்ற அந்தஸ்துக்காக நீர் மட்டும் ஒவ்வொரு நாளும் முன்னுக்கு நின்று கும்பிடுகி



பாராட்டுப் பரிசுபெற்ற தமிழ்ப்பிரியா

'தமிழ்ப்பிரியா' என்ற அழகான இனிய புனைப்பெயரைக் கொண்ட இவரின் இயற்பெயர் செல்வி எம். புஸ்பராணி என்பதாகும்.

ஈழத்துப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் அனைத்திலும் இவரது சிறுகதைகள் வெளிவந்துள்ளன. தமிழக சஞ்சிகையான குங்குமத்திலும் இவரது படைப்புக்கள் பல பிரசுரமாகியுள்ளன. இதுவரை 33 சிறுகதைகளையும் ஒரு குறுநாவலையும் எழுதியுள்ளார்.

'ஜெட்' வேகத்தில் எழுதிக் குவிக்கும் நாடறிந்த பெண் எழுத்தாளர்களில் இவரும் ஒருவர்.

நீரே......இது எந்த விதத்தில் நியாயம் என்று கேட்கிறேன்?"

தெறிக்க விரும்புகின்ற அவசரத்தோடு மனதிற்குள் ஆர்ப்பரித்துக் கொண்டுவந்த வார்த்தைகளை கஷ்டப்பட்டு...— மிகக் கஷ்டப்பட்டு அடக்கிக் கொண்டான் அவன்.

இப்படி ஒவ்வொரு வாரமும் அதிகாரம் அமுலுக்கு வரும். ஒருவாரம் பொலிஸ் சுப்பிரிண்டனும் மனைவியும் வருவார்கள். அடுத்த வாரம் டிறக்டரும் மனைவியும் அல்லது கொமிஷனரும் மனைவியும் வருவார்கள். மறுவாரம் இன்னமும் ஒரு பெரியபுள்ளியும் மனைவியும் வருவார்கள். அவர்கள் வந்ததுதான் தாமதம்......அத்தனை சனங்களுக்குமிடையில் "தள்ளுங்கோ......... கொஞ்சம் தள்ளுங்கோ......... என்று ஓசை கொடுத்தபடி...... அவர்களை கையில் பிடித்துக் கொண்டுபோகாத குறையாக- —அழைத்துக் கொண்டு போய் எல்லோரிலும் முன்னுக்கு இருக்க வைப்பதைப் பார்த்து அவன் மிகவும் வேதனையோடு சிரித்துக் கொள்வான்.

பணத்திற்கும் பதவிக்கும் மற்ற இடங்களில்தான் ஆலவட்டம் பிடித்து...... பாரபட்சம் காட்டுகின்றார்கள் என்றால் இங்கேயுமா? ஒரு புனித ஆலயத்தில்கூடவா......அந்த ஆலவட்டப்பிடிப்பு தொடர்கிறது.

இன்னும் ஒரு நாள். அன்று பௌர்ணமி தினத்தின் விஷேச பூசை நாள். ஒரு மணிநேரம் மந்திர ஓதலைக் கேட்டே......... அமைதியாக பக்தர்கள் முருகனை வழிபாடு செய்வார்கள். நடந்து செல்வதற்கென்று ஒற்றையடிப்பாதை விட்டு... எல்லோரும் அமைதியாக அமர்ந்திருந்தார்கள். அந்த வேளையில்தான் அவள்—பார்வைக்கு வறிய குடும்பத்துப் பெண் என்று உணர்த்துகின்ற அவள்... இரண்டு குழந்தைகளுடன் சற்று வயதான தாயும் பின் தொடர வந்து சேர்ந்தாள். வாசலில் வீழ்ந்து வணங்கிய பின்பு..........கோயிலைச்சுற்றி வந்து கும்பிட அவள் நடக்க முயன்றதும்.......!

அப்போதுதான் ஏதோ அலுவலாக உள்ளே நின்று வந்த சிவசங்கரன் அதைப் பார்த்ததும்...—ஏதோ தகாத காரியமொன்றைப் பார்த்து விட்டது போன்ற சின்னத் துடிப்போடு.. இரண்டு கைகளையும் விரித்து..... மேலும் கீழும் மெல்ல ஆட்டியபடி.. ......

"என்னப்பா இது? என்னப்பா இது? சந்திரன்! இப்ப ஒருத்தரையும் கோயிலைச் சுத்திக் கும்பிட விடாதையும் கும்பிட விரும்பிறவை பூசை முடிந்த பிறகு சுத்திக் கும்பிடட்டும்!......"

கோயில் தொண்டு செய்யும் சந்திரன் என்ற அந்த இளைஞனை நோக்கி.........சற்று உயர்ந்தகுரலில் சொன்னாரோ இல்லையோ......அதைப் பார்த்துக் கொண்டிருந்த அவனுக்கு ஆத்திரம் பீறிட்டுக் கொண்டு வந்தது.

"நீர் ஒரு பெரிய மனிதர். படித்த மனிதர். கோயிலின் தர்மகர்த்தா. அப்படியான நீர் ஏன் இப்படியெல்லாம் நடந்து கொள்கிறீர்? எங்களின்றை இந்துசமய முறைப்படி கூட கோயிலுக்குள் நுழைந்தவுடனை சுற்றிவந்து கும்பிடுகிறது தானே வழக்கம். அப்பிடியிருக்க....கோயிலில் கும்பிடுகிற சனங்களை தடுக்கவும் சட்டம் போடவும் உங்களுக்கு அதிகாரம் இல்லை. நீங்கள் சொல்லுிற நேரம் கும்பிடவேணும்...! தடுக்கிற நேரம் கும்பிடக் கூடாது என்றால்......? இவள்— இந்தப் பெண்...... ஒரு சுப்பிரீண்டனின் மனைவியாகவோ... அல்லது பிரபலமான ஒருவரின் மனைவியாகவோ இருந்திருந்தால்......எத்தினை ஆரவாரத்தோடை அழைத்துக்கொண்டு போயிருப்பியள் இல்லையே?"

அந்தக் கோயில் முதலாளிக்கு முன்னால் போய் கொஞ்சம் பெரிய குரலில்—முகத்தில அறைவதுபோல் பட்டெனக் கேட்க வேண்டும் போலிருந்தது அவனுக்கு. என்ன செய்வது என்று குமைகின்ற மனதைச் சமாதானப் படுத்திக் கொண்டு மௌனமாக இருந்தான். ஒவ்வொரு வாரமும் இப்படியான செய்கைகளைக் கவனிப்பதிலேயே மனம் அமைதியின்றி அல்லற்பட்டுக் கொண்டிருந்தது அவனுக்கு.

நாட்கள் மெல்ல மெல்ல நகர்ந்து கொண்டிருந்தன. வழமைபோல் அன்றும் அவன் கோயிலுக்கு வந்திருந்தான். மற்றைய பூசைகள் முடிந்து வசந்த மண்டபப் பூசைக்காக எல்லோரும் அமைதியாகக் காத்திருந்தார்கள். திடுமென எல்லோர் மத்தியிலும் சின்னப்

## ரஷ்யாவில் தமிழ் ஆராய்ச்சி

1914 இல் மினயேவ் என்ற பிரபல ரஷ்ய மொழி இயலாளர் தென் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் வந்து மொழியியல் ஆராய்ச்சிகளை 4 ஆண்டு காலம் நடத்தினார். அவர் சேகரித்த விடயங்கள் ரஷ்யாவில் திராவிட மொழி ஆராய்ச்சிக்கு தோற்றுவாயாக அமைந்தன.

1960 இல் தமிழ்—ரஷ்யன்—மற்றும் ரஷ்யன்—தமிழ் அகராதிகள் மொஸ்கோவில் வெளியிடப்பெற்றன. மாபெரும் தமிழ் இலக்கியங்களான திருக்குறள், சிலப்பதிகாரம், பாரதியார் நூல்கள், வரதராஜன், புதுமைப் பித்தன், கல்கி, ஜெயகாந்தன், அகிலன் முதலியோரது தமிழ் படைப்புகள் 'ரஷ்யனில் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன. திருவள்ளுவர் சங்கரர், கப்பலோட்டிய தமிழன் ஆகியோரின் தத்துவங்களையும் ரஷ்யன் நிபுணர்கள் மிக ஆழமாக ஆராய்ந்து வருகின்றனர்.

இ.சிவானந்தன்,
பெரியமாவடி.

பரபரப்பு. என்ன என்று அறிய விரும்புகிற ஆர்வத்தோடு அவனும் பார்வையை நிமிர்த்தி வெளியே ஓடவிட்டான். குபீரென்று மனத்துள் பரவிய சிரிப்பு இதழ் விளிம்பிலும் வலம் வந்து கொண்டது.

அரசாங்க அதிபரும் மனைவியும் உள்ளே வந்து கொண்டிருந்தார்கள், முகத்தில் தங்கி நின்ற தனிப் பிரகாசத்தோடு அவர்களை வரவேற்று அழைத்து வந்து....முன்னுக்கு அமர்ந்திருந்த சிலரை கொஞ்சம் தள்ளி இருக்கச் சொல்லி விரட்டிவிட்டு.... அவர்களோடு தானும் அமர்ந்து கொண்டார் சிவசங்கரன்.




புதுமுறையாய் வசந்தமண்டபப்பூசை முடிந்ததும் ஜி.ஏ.க்கும் மனைவிக்கும் இஸ்பெஷல் அருச்சனை நடை பெற்றது. குருக்கள் இவரின் பெயர் நட்சத்திரங்களையும் பெரிய குரலில்......எல்லோருக்கும் கேட்கக் கூடியதாகச் சொல்லி மந்திர ஆராதனை செய்தார். தீபாராதனை கூட தனித்தனியாகவே நடைபெற்றது.

ஜி. ஏ. விஜயம் செய்ததாலோ ...என்னவோ....பூசை முடிந்த பின்புதான் திருவாளர் சிவசங்கரன் அவர்கள் தன் பத்து நிமிஷ உரையை ஆரம்பித்தார். அவன் அதைக்கேட்கின்ற ஆவலில் சற்று நிமிர்ந்து உட்கார்ந்து கொண்டான்.

"இன்று இந்த ஆலயத்திற்கு எங்கள் பெருமதிப்பிற்குரிய அரசாங்க அதிபர் திரு. "..................'' அவர்களும் அவரின் துணைவியாரும் வந்திருப்பதை நீங்கள் எல்லோரும் அவதானித்திருப்பீர்கள்......!''

"ஓம்! கவனித்த நாங்கள் நல்லாய் கவனித்த நாங்கள். இவ்வளவு தூரம் நீங்கள் ஆலாத்தி எடுத்து வரவேற்கும் போது.........நாங்கள் எப்படிக் கவனிக்காமல் விடுகிறது.......!'' அவனின் மனம் உள்ளுக்குள் சிறிது ஆவேசத்தோடு அரற்றியது.

"......அவர் இங்கு விஜயம் செய்திருப்பதையிட்டு நாங்கள் பெருமைப்படுகின்றோம். மகிழ்வடைகின்றோம். நன்றி கூறுகின்றோம்......!''

"அருமை! அருமையிலும் அருமை. ஒரு கோயிலுக்கு ஜி.ஏ. விஜயம் செய்திருப்பதற்காக பெருமைப்பட்டு... நன்றி சொல்லுகின்ற இந்தப்படலம் நிச்சயமாக நடக்கத்தான் வேணும். சிவ சங்கரன் அவர்களே! ஒரு தெய்வ சந்நிதானத்தில் தர்மத்தை ஏன் இப்பிடிக் குழிதோண்டிப் புதைக்கிறீர்? அவர் ஜி.ஏ.ஆக இருக்கலாம். இல்லாவிடில் வேறு பெரிய பதவியிலுள்ளவராக இருக்கலாம். தெய்வத்தைத் தரிசிக்க வந்த ஒருவரைப் பார்த்து பெருமைப் பட்டு மகிழ்ச்சியடைந்து.........நன்றி சொல்லி......இப்படி ஒரு அதர்மத்தை கோயிலில் ஏன் வளர்க்கிறீர்!'' விழிகளில் சினப்புத் தேங்கி நிற்க பற்களை இறுகக் கடித்துக் கொண்டான் அவன்.

"........நாங்கள் இப்போது கோபுரம் கட்ட ஆரம்பித்திருக்கிறோம். அதற்கு இந்தியாவில் இருந்து சிற்பக்கலைஞர்களை வரவழைக்க வேணும். அதற்கான உதவிகளையெல்லாம் ஜி.ஏ. அவர்கள் செய்து தர வேண்டும் என்று அன்போடு வேண்டுகின்றேன்."

"ஓ! இதுக்குத்தான் இந்த ஜி.ஏ.க்கு இப்பிடி பந்தம் பிடிக்கிறீரோ! அவரை ஒரு ஜி.ஏ.ஆக நியமித்திருக்கிறதே...... இந்த மாவட்டத்தை நல்லமுறைக்கு கொண்டு வாறதுக்குத்தான். இப்பிடியான உதவிகளைச் செய்ய வேண்டியது அவரின்

கடமை. இல்லாவிட்டிலும்கூட கோயில் தொண்டு செய்வதில் பக்தர்கள் எல்லோருக்கும் பங்குண்டு. இந்தக் கோபுர உதவிக்காக ஜி ஏ.யின் காலில் விழுந்து கெஞ்சவும் பக்தர்கள் தயங்கமாட்டினம். அதுக்காக முருகனை வழிபட வந்த ஒருவருக்கு கோயிலில் வைத்து நன்றி சொல்லாதையும். இது தெய்வத்தையும் இத்தனையாயிரம் பக்தர்களையும் அவமானப் படுத்துவதற்குச் சமமாகும்........!''

வார்த்தைகள் குதித்துக் குதித்துப் பரபரக்கிற மனத்தோடு அவன் மௌனமாக அவரின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தான்.

"......... தவிர, இந்த முருகன் ஆலயத்தின் வரலாறு உங்கள் எல்லோருக்கும் தெரியும். ஜி.ஏ. அவர்களுக்கும் தெரிந்திருக்கும். என்றாலும்.... மீண்டும் ஒரு முறை ஜி ஏ.அவர்களுக்காக முருகனின் வரலாற்றைச் சொல்ல விரும்பிறன்..."

''சபாஷ்!'' மெல்ல......ஆத்திரத்தின் தெறிப்பாய் வாய்விட்டுச் சிரித்தவன்.........பட்டென எழுந்து கொண்டான். இதற்கு மேலும் இந்தப் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்தால்...குமுறுகின்ற கொதிப்பு கொட்டுகின்ற வார்த்தைகளாக வெளியே சிந்தியேதீரும். அப்படி அவன் வார்த்தைகளைக் கொட்டினால் எல்லோரும் திகைத்துப் போனவர்களாய்.-

"ஆர் இவன்? மூளை கொஞ்சம் கழண்டு, கிழண்டு போச்சோ? இவ்வளவு பேரும் பேசாமல் இருக்கினம். ஆக இவர் மட்டும்தான் நியாய—அநியாயம் பற்றிப் பேச வெளிக்கிட்டிருக்கிறார்!'' என்ற பாணியில்......உதட்டு விளிம்பில் தங்கி நிற்கும் கேலிச்சிரிப்போடு...ஒரு மாதிரியாக அவனைப் பார்ப்பார்கள். அந்த அவஸ்தை ஒன்றுமே வேண்டாம் என எண்ணியவனாய் வெளியே போக அடியெடுத்து வைத்தவன் அப்படியே அதிர்ந்துபோய் நின்று விட்டான்.

"போதும் முருகனின் வரலாறைச் சொன்னது போதும்! நிறுத்துங்கோ......!''

"யாரது?'' அவனின் பார்வை அவசர அவசரமாக குரல் வந்த திசையை நோக்கித் திரும்பியது.

"அதர்மத்துக்கும் ஒரு அளவு வேணும். நானும் ஒவ்வொரு கிழமையும் கவனித்துக் கொண்டுதான் வாறன். தர்மம் நிலைக்க வேண்டிய புனித தலத்தில் ஏன் இப்பிடி அதர்மத்தை வளர்க்கிறியள். கோயிலுக்கு வாறவைதான் இறைவனுக்கு பன்னீர் தெளித்து ஆலவட்டம் பிடிக்க வேணுமே தவிர...—கோயிலுக்கு கும்பிட வாறவைக்கு யாருமே பன்னீர் தெளித்து ஆலவட்டம் பிடிக்கிறேல்லை. பதவிக்கு பந்தம் பிடிக்கிறதெல்லாம் வெளியிலை நடக்க வேண்டியது. இது கோயில். இங்கை பட்டம், பதவி, பணம் எதுக்குமே இடமில்லை. இறைவன் உண்மையான பக்திக்கு மட்டும்தான் பணிவான். இரங்குவான். தரிசனம் தருவான். இறைவன் உயர்ந்தவன் தாழ்ந்தவன், வெள்ளையன் கறுப்பன் என்ற வித்தியாசம் பார்த்து பாரபட்சம் காட்ட மாட்டான். முன்னுக்கு நின்று கும்பிட்டால் என்ன? பின்னுக்கு நின்று கும்பிட்டால் என்ன? உண்மையான பக்தியோடை கும்பிடுறவனைத்தான் இறைவன் பார்ப்பான். கோயிலுக்கு கும்பிட வந்தவைக்கு நீங்கள் பாராட்டுச் சொல்லத் தேவையில்லை; அதுக்காக யாருமே கோயிலுக்கு வாறேல்லை. நாங்கள் கோயிலுக்கு வாறது எங்களுக்காக. எங்களின்ரை துன்ப—துயரங்களுக்கு ஒரு விடிவை-ஆறுதலைத் தேடுறதுக்காக. மனதுக்கு ஒரு சாந்தியை ஏற்படுத்துவதற்காக. ஜி. ஏ. ஆக இருந்தால் என்ன? சுப்பிரின்டனாக இருந்தால் என்ன? அவர்கள் தங்களுக்காகத்தான் முருகனை வழிபட வந்தவை. அதற்கு நீங்கள் இத்தனை வரவேற்புரை சொல்லுறது அதர்மம். அதர்மத்திலும் அதர்மம். தர்மமும் நியாயமும் காப்பாற்றப்பட வேண்டிய முதல் இடம் கோயில். இங்கை அதர்மத்தையும், அநியாயத்தையும் வளர்க்காதையுங்கோ. ஒரு தெய்வ சந்நிதானத்திலேயே இப்பிடி நடக்கேக்கை...வெளியில்—சமூகத்தில் எப்பிடி நீதி, நியாயம் நிலைக்கும்? நடைபெறும்? முதலிலை இங்கை நடக்கிற அதர்மத்துக்கு குழி தோண்டுங்கோ.........!''

பெரிய குரலில் பேசியதாலோ...... என்னவோ...அவனுக்கு மெல்ல மூச்சு வாங்கியது. கண்களில் இருந்து உதிரும் நீரோடு வெளியே நடந்

### இலங்கை ''எம்.பி.''க்கள் எல்லோரும் மந்திரிகள்!

அதிசயம்! ஆனால் உண்மைதான்!

உலகிலேயே கூடுதலான மந்திரிகளையுடையநாடு, தற்போது இலங்கைதான். உதவி மந்திரிகள், மாவட்ட மந்திரிகள் உட்பட ஏறக்குறைய எண்பது மந்திரிகள்—இங்கு.

ஆனால், அது பற்றிய நல்ல இத்தகவல். இங்கு பாராளுமன்ற உறுப்பினரை(எம்.பி.) சிங்கள மக்கள் 'மந்திரி' என்றே அழைக்கின்றனர். மந்திரியை 'அமைத்தி' என்பார்கள்.

'அமைத்தி' என்பது அமைச்சர்' என்னும் அழகிய தமிழ்ச் சொல் மருவியதாக இருக்கலாம்.

—கதிர்மாணிக்கம்

தாள்: அத்தனை சனங்களும் பிரமை பிடித்தவர்களாய் திகைத்துப் போய் விழித்தார்கள்.

அவனும் பிரமித்துப் போனவனாய் அப்படியே நின்றான். "அவளா? ஓர் ஓரமாக நின்று கண்களில் நீர் மல்க...வழிபடுகின்ற அவளா? சுவாமி சுற்றுலா வரும்போது மென்மையான குரலில் பாடிக் கொண்டுவரும் அவளா? வெள்ளைச் சேலையுடன் அமைதியாக ஒதுங்கி நிற்கும் அந்த விதவைப் பெண்ணா......இப்பிடி... கம்பீரமாக தைரியமாக ஒரு அதர்மத்தைச் சுட்டிக் காட்டியிருக்கிறாள்?" அவன் நம்ப முடியாதவனாக சிலிர்த்துப் போன மனத்தோடு வெளியே வந்தான்.

நினைக்க நினைக்க நெஞ்சம் ஒரு அவமான உணர்ச்சியில் குறுகுறுத்தது. அவனைப் போல் அவளும் இவற்றையெல்லாம் கவனித்திருக்கிறாள். ஆனால்.....அவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுகின்ற தைரியம் இல்லாமல் அவன் குறுகி நிற்க...... அவள்—ஒரு பெண் எவ்வளவு தைரியமாகச் சுட்டிக் காட்டிவிட்டு வந்திருக்கிறாள். என்றாலும்...... அந்தத் தவறு சுட்டிக்காட்டப் பட்டுவிட்டதே என்றளவில் அவனுக்கு மனதிற்குள் மகிழ்ச்சியாக இருந்தது.

அவன் வெளியே வந்த போது......அவள் வெளிவீதியில் மணலில் அமர்ந்து கண்களை மூடியபடி மிக மெல்லிய குரலில் பாடிக் கொண்டிருந்தாள்.

அதைப்பார்த்த போது... தெய்வமே அவளுருவில் வந்து இப்படிப் பேசியது போன்ற பிரமைஏற்பட்டது அவனுக்கு. அந்த மன நிறைவோடு அவள் பாடுவதையே கேட்டுக் கொண்டு மௌனமாக நின்றான் அவன்.

(யாவும் கற்பனையே)

# பதில்கள்

## நக்கீரன்

வே. சச்சிதானந்தம், அமிர்தகழி

கேள்வி! அமைச்சர் இராசதுரை என்ன செய்கிறார்? அவரது அகில உலக இந்து மாநாடு என்னவாயிற்று?

பதில்! அமைச்சர் இராசதுரை ஜே.ஆர். கொடுத்த 'மந்திரி' என்ற கிலுகிலுப்பையை வைத்து விளையாடிக் கொண்டிருக்கிறார்! (அமைச்சர்கள் தேவநாயகம்-தொண்டமான் இவர்களும் அப்படியே). கூரை,ஏறி கோழி பிடிக்க முடியாத குருக்கள் வைகுந்தத்துக்கு வழிகாட்டப் போகிறேன் என்ற கதைதான் அகில உலக இந்து மாநாடு.

எஸ். சிவலிங்கம், நல்லூர்.

கேள்வி: அடுத்த பொதுத் தேர்தலில் சிறிமா பண்டாரநாயக்காவின் தலைமையிலுள்ள சுதந்திரக்கட்சி ஆட்சியைப்பிடிக்கும்வாய்ப்புண்டா?

பதில்: தேர்தலுக்கு இன்னும் 3 வருடங்கள் இருக்கின்றன. தேர்தல் முடிவுபற்றி இப்போதே அரசியல் ஆரூடம் கூறுவது முடியாத காரியம். ஆனால் சிறிமா பண்டாரநாயக்காவின் சுதந்திரக் கட்சி ஆட்சியைக் கைப்பற்ற வேண்டுமென்றால் நாட்டிலுள்ள சகல முற்போக்கு—சோசலீச சக்திகளையும் ஒன்று திரட்டவேண்டும். அது மட்டும் போதாது தமிழ் மக்களது அரசியல்—சமூக—பொருளாதார பிரச்சினைகளை சமத்துவ அடிப்படையில் முற்று முழுதாக தீர்ப்பதற்குரிய திட்டம் தீட்டப்பட்டு அது தமிழ்த் தலைவர்களது அங்கீகாரத்துக்கு முன் வைக்கப்பட வேண்டும். இப்படியான நடவடிக்கைகள் மூலமாகவே சிறிமாவும் சு. கட்சியும் ஆட்சியைகைப்பற்றலாம். தனித்து நின்று ஆட்சியைப் பிடிப்பது முடியாத காரியம்.

ச. சௌந்தரராஜா, கனகராயன் குளம், மாங்குளம்.

கேள்வி: சுயநலத்தை அடிப்படையாகக் கொள்ளாத அரசியல் வாதிகள் யாராவது உண்டா?

பதில்! அவர்கள் சுயநலத்தில் பொது நலமும் இருக்கிறது.

கேள்வி! சரியான ஒரு தலைமை இன்மையே இன்றைய தமிழ் இளைஞர்களின் ஆவேசத்துக்குக் காரணம் என்று நான் கூறுகின்றேன். தங்கள் கருத்து என்ன?

பதில்: தலைமையை இணைக்க முடியாது. இருக்கிறதை வைத்துக் கொண்டு சமாளிக்க வேண்டியதுதான்.

அ. ரவிமோகன்,
பா.கிருபாகரன், பருத்தித்துறை:

கேள்வி: சுதந்திரன் ஆசிரியரின் பேச்சும், எழுத்தும், போக்கும் அவ்வளவு சரியில்லை எனப் பரவலாகப் பேசப்படுகிறதே தங்கள் கருத்து என்ன?

பதில்: சுதந்திரன் ஆசிரியரது பேச்சு, எழுத்து, போக்கு அன்றும் சரி — இன்றும் சரி ஒரே மாதிரித்தான் இருக்கிறது. ஈழவிடுதலையை மூச்சாகக் கொண்டு விட்டவர்களில் அவரும் ஒருவர். இதயத்

தில் ஒளி இருக்கிறது எனவே உண்மையை பச்சையாக எழுதிவிடுகிறார். தாங்கள் சட்டை மாற்றிக் கொண்டது போல்—அவரும் மாற்றிக் கொள்ளவில்லையென்பதுதான் சிலரது ஆதங்கம். இல்லை ஆத்திரம். இன்று ஈழத்தில் அவரைப் போல் அரசியலை கூர்மையாக எழுதக் கூடியவர்கள் வேறு யாருமில்லை.

கேள்வி! மாவட்டசபையை ஏற்பதனால் விடுதலைப் பயணத்திற்கு ஒரு தீங்கும் வராது என்பது எமது கருத்து தங்கள் கருத்து என்ன?

பதில்: அப்படியா சங்கதி? விடுதலைத் தீயை மாவட்ட அபிவிருத்தி சபை என்ற தண்ணீர் ஊற்றி அணைத்துவிட்டார்களே அது உங்கள் கண்ணுக்குத் தெரியவில்லையா? உள்—வெளி உலக விடுதலைப் போராளிகள் இன்று மனம் ஒடிந்து கிடக்கிறார்களே அதைப் பார்க்கவில்லையா? தலை சிறந்த விடுதலைப் போராளி வைகுந்தவாசனையே கூட்டணி ஏடு சாடுகிறதே! அது தீமையில்லையா?

செல்வன். எஸ். துவாரகன், வவுனியா.

கேள்வி: யான் கடந்த காலங்களில் எல்லாம் திருவாளர் வ. நவரத்தினம் அவர்களையே ஆதரித்துவருகின்றேன். இன்னும் எனக்கு அவருடைய செயற்பாடுகளில் நம்பிக்கை பூரணமாக உண்டு. வருங் காலங்களில் அவரது கட்சி இயங்கும்போது பூரண ஆதரவைக் கொடுத்து ஊக்குவிக்க வேண்டும் என எண்ணியுள்ளேன் இதுபற்றி தங்கள் கருத்து என்ன? விளக்கமான பதிலை எதிர்பார்க்கிறேன்.

பதில்: திரு. வ. நவரத்தினம் தெளிவாகச் சிந்திக்கக் கூடியவர். ஆனால் செயல் திறமை பூச்சியம். அவரை நம்புவது மண் குதிரையை நம்பி ஆற்றில் இறங்குவதற்கு சமம்.

வே. லோகேஸ்வரன், கோப்பாய் வடக்கு, கோப்பாய்.

கேள்வி! தமிழ் ஈழத்துக்கு குறைந்த எந்தக் கோரிக்கையையும் ஏற்க மாட்டோம் என்று கூறி தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்ற கூட்டணியினர் எந்தவித அதிகாரமும் இல்லாத மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்டிருப்பதின் மூலம் தம் கடமையையும் மறந்து தமிழ் மக்களைத் துணிந்து ஏமாற்றத் தலைப்பட்டு விட்டார்களே இவர்களை இனிமேலும் தமிழ் மக்கள் நம்பலாமா?

பதில்: தமிழ்ஈழம் வேறும். மாவட்ட சபை வேறும். முன்னையது பிளேனும் பின்னையது காராம். ஆனால் இந்த வாதங்களில் வாய்மை இல்லை. தமிழ் மக்கள் குறிப்பாக இளைஞர்கள் இதை நம்பமாட்டார்கள். புலி வேட்டைக்குப் புறப்பட்டவர்கள்,எலியைப்பிடித்த மாதிரி—தமிழ் ஈழம் காணப் புறப்பட்டவர்கள் மாவட்ட அபிவிருத்தி சபையைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்.

கேள்வி: மாவட்ட அபிவிருத்திச் சபையை ஏற்றுக் கொண்ட கூட்டணியினரைப் பற்றி தமிழ் ஈழத்துக்காகப் பாடுபடும் கிருஷ்ணா வைகுந்தவாசன் போன்ற பெரியோர் என்ன நினைப்பார்கள்?

பதில்! தாங்கள் நாட்டாற்றில் விடப்பட்டு விட்டதாக உளமார நம்புவார்கள்!

மா. இளம்பிறைமான், அச்சுவேலி வடக்கு.

கேள்வி: "நாட்டின் பெருந்தலைவரின் கொடும்பாவியை எரிக்கத் துணிவுண்டா"என்ற 'அமிரி'ன் கூற்று—ஜே. ஆரின் தலைமையையும் சிறிலங்கா ஒற்றையாட்சியையும் 'அமிர்' ஏற்றுக் கொண்டு விட்டதாக அமைகிறதே?

பதில்! கொடும்பாவி எரிப்பு சம்பவம் அவரது நிதானத்தை இழக்கச்செய்துவிட்டது. அதன் விளைவுதான் இந்த பேச்சு. என்னை அடித்துப் போட்டாய் என் அப்பாவை அடிப்பியா? என்று கேட்கும் குழந்தையின் கேள்வி இது.

கேள்வி! "எங்கள் இலங்கைத் தமிழ் மக்கள் எதற்கும் பணம் தருவார்கள். ஆனால் ஒரு நல்ல இயக்கத்திற்கு அதிலும் விடுதலை இயக்கத்திற்கு பணம் தரமாட்டார்கள்...... இயக்கத்திற்குத்தேவை என்று நாங்கள் போய்க் கேட்டால் 5ரூபாய் அவர்களுக்குப் பெரிய தொகையாகத் தென் படும்" என்று தமிழ் நாட்டில், தலைவர் அமிர் கூறியுள்ள வசனங்கள்—ஈழத் தமிழ் மக்களை இழிவு படுத்திவிட்டதல்லவா?

பதில்: தமிழ் மக்கள் கேட்கும்போதெல்லாம் தங்கள் சக்திக்கு உட்பட அள்ளிக்கொடுத்திருக்கிறார்கள் என்பதுதான் என் அபிப்பிராயம் அமிர் இந்தக் கருத்தை ஒரு வாதத்துக்காக சொல்லி இருக்கலாம்.

சா. சிவசங்கரநாதன், தெய்வங் கேணி வீதி, சரசாலை.

கேள்வி: எதிர்க் கட்சித் தலைவர் அமிர்தலிங்கம்,பொலீஸாரை 26 — 11 — 80 இல் பாராளுமன்றத்தில் பாராட்டினாரே. முன்பு அமைச்சர்களைப் பாராட்டிய அமிர்தலிங்கம் இன்று பொலிசாரையும் பாராட்டி விட்டார். இனி ஈழம் சாத்தியம் இல்லை என்று கூறினாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. இதுபற்றி தங்கள் கருத்து யாது நக்கீரரே?

பதில்: எதிர்க்கட்சித்தலைவரின் பேச்சை நீர் முற்றுமுழுதாக படிக்கவில்லைப் போலும் தற்போதைய யாழ். பொலீஸ் அதிபரின் சில நடவடிக்கைகளைத்தான் அவர் பாராட்டியிருக்கிறார். சும்மா சொல்லக்கூடாது. அவரின் இந்த வருட வரவு செலவுத்திட்ட உரை சற்று சூடாக — காரமாகவே இருந்தது.

இ. ராஜன், "ராஜபவனம்" சங்கானை.

கேள்வி: நமது எதிர்க்கட்சி தலைவர் திரு அமிர்தலிங்கம் அவர்கள் இப்போ அரசாங்கத்தின்மீது புலியைப்போல பாய்வதற்கு பதுங்குகின்றாரா? அல்லது பாயாமல் இருந்துவிடுவாரா?

பதில்! புலியைப் போல பாய்வார் என்று எதிர்பார்ப்போம்.



# முரண்பாடுகளின் அறுவடை

கோகிலா மகேந்திரன்

3-ம் பரிசுக் கதை

"கூ...ஊ...ஊய்...கூ ஊ...ஊ...ய்"

மாங்கன்றுக்காகக் குரல் கொடுக்கிறாள் குறுக்குக் கட்டின ஒரு கிழவி.

"றேடியோவிலை பாட்டு முடிஞ்சது நேரம் அப்ப பத்து மணிக்கு மேலையாவிட்டுது என்னடி......?"

'மாங்கண்டு இவ்வளவு நேரமா என்ன செய்யிறாள்? ஒரு வேளை வேலைக்கு வரேல்லையோ?'

சித்தைப் பாவாடையும் சட்டையும் போட்ட பெட்டைகளும் சட்டை போட்டுத் தட்டுடுப்புச் சீலை உடுத்த "பொம்பிளையளும்," குறுக்குக் கட்டின கிழவிகளுமாய்.........ஒரு பதினைந்து பேர் அந்தப் புளிய மரத்தடிச் சந்தியில் கூடியிருக்கிறார்கள். வருகிற வழி நெடுகிலும் ஒவ்வொன்றாகச் சேர்ந்து வந்திருக்கிற இந்தக் கூட்டத்தில் கடைசியாக வந்து சேர வேண்டிய மாங்கன்றும் வந்து விட்டால் "விறுக்கு விறுக்கென்று" நேரே வெங்காயத் தோட்டத்திற்கு நடக்க வேண்டியதுதான்.

மாங்கண்டுக்கும் இரண்டு மாசம் சூதகம் வராமல் நிக்குதா மெல்லே'

"பதினொரு மணிக்கு போய்ச் சேராட்டி, தோட்டக்காறர் பேசப் போயினம் எக்கணம்......"

"கூ...ஊ...ஊய்...கூ...ஊ...ஊ......ஊ......ய்......" குரல் கொடுத்த ஐந்து நிமிடங்களின் பின்னர் புளியடிச் சந்திக்கு வருகின்ற கை ஒழுங்கையில் மாங்கன்று மெதுவாக நடந்து வருவது தெரிகிறது. வழக்கம் போலக் கையையும் ஆட்டிக் கொண்டு வேகமாய் நடந்து வர அவளால் முடியவில்லை. அவளுடைய நடையிலே இருந்த பழைய லாகவமும் தென்படவில்லை. காலையிலே குடித்த "பழம் பானைத் தண்ணி" விரைவில் வெளியே வந்து விடுவேன் என்பதுபோல் குமட்டிக் கொண்டு மேலே வருகிறது. காலையில் நித்திரைப் பாயில் கண் விழித்த போதே, உலகமெல்லாம் சுற்றிக் கண்ணெல்லாம் இருட்டிக் கொண்டு வந்தது அவளுக்கு.

"இண்டைக்கு வேலைக்குப் போகாமல் விடுவம்..." என்று தான் படுத்திருந்தபடி யோசித்தாள். ஆனால்......

'வெங்காயம்நடுறகாலம்புல்லுப் புடுங்கிற காலம் கிண்டுற காலத்திலைதான் இப்பிடி ஒவ்வொரு நாளும் வேலை வரும். இதுகளுக்குப் போய் ஒவ்வொரு நாளும் ஒரு எட்டெட்டு ரூபா வாங்கிக் கொணந்து வைக்காட்டிப் பிறகு வேலை கிடையாத காலங்களிலை அடுப்பெரியாது. மனுசன் சம்பாதிக்கிற காசு தவறணைச் செலவுக்குத்தான் போதும். உழைப்பு வாற காலத்திலை கொஞ்சம் மிச்சம் பிடிச்சு வைக்காட்டா...பிள்ளை பிறக்கிற காலத்திலை கஞ்சியும் கிடையாது" என்ற யோசனையும் கூட வந்து புறப்பட்டு விட்டாலும் வழக்கமாய் இருக்கின்ற உற்சாகம் இல்லை உடம்பில்.

"என்னடி மாங்கண்டு......எத்தினை தரம் குரல் கொடுத்தன்...... உனக்குச் கேக்கேல்லையே..." கிழவி கேட்கிறாள்.

"கேட்டது அக்கை...என்னுலை இண்டைக்கு ஒண்டும் ஏலேல்லை...பேசாமக் கிடக்கப் பாத்திட்டுப் பிறகும் ஒழும்பி வாறன்......"

'சரி சரி, வாருங்கோ கெதியாப் போவம்......'

புகைவண்டியின் எஞ்சின் போல் கிழவி முன்னே செல்ல மிகுதி பதினைந்து பேரும் வரிசையாய் பின்னால் ஓடி ஓடிச் செல்கிறார்கள்.

"நல்லா வெயில் ஏறினுப் பிறகு வாறியள்........பேந்தும் பொழுது பட முந்திப் போயிடுவியள் கெதியாத் தொடங்குங்கோ வேலையை..." தோட்டத்தின் உரிமையாளரான பென்சனியர் ஆறுப்பிள்ளையின் அதிகாரக் குரலுக்கு எல்லாரும் கீழ்ப்படிகிருர்கள்.

நெருப்பு மாதிரி எரிகின்ற வெயிலில் தலைக்கு ஒரு பழந்துணி கூட இல்லாமல் வெங்காயத் தரையில இறங்கிவிட்டார்கள் சிலர், கையில் வைத்திருந்த பனை ஓலைப்பெட்டிகளைத் தலையில் கவிழ்த்துக் கொண்டு வேலையைத் தொடங்குகிருர்கள் கிழவிகள். மாங்கன்றும் ஈரத்தரையில் கால் புதைய இறங்கி நின்று குனிந்து ஒரு பாத்தியில் உள்ள புற்களைப் பிடுங்குகிருள். ஒரு அரைமணி நேரம் கூட ஆகியிருக்காது. குடல் முழுவதுமே புரண்டு எழுவது போனற உணர்வுடன் மஞ்சள் மஞ்சளாய்ச் சத்தி எடுக்கிருள் அவள்.

'கொஞ்ச நேரம் போய் உந்த ஆடுகால் நிழலிலை இரடி. உந்தக் கோதாரியோடை என்னத்துக்கு வேலைக்கு வந்தனி எண்டு எனக் கெண்டால் விளங்கேல்லை......'

பக்கத்தில் நின்ற கிழவி கண்டிப்பாகச் சொல்வது போல் சொல்கின்ற வார்த்தைகளில் உள்ளூர ஒரு அநுதாபமும் பாசமும் இழையோடியதைப் புரிந்து கொண்டவளாய் இடத்தை விட்டு வெளியேறுகிருள் அவள்.

இறைத்துக் கொண்டிருந்த "மிசின்" தண்ணீரில் நிறைய அள்ளி முகத்தையும் வாயையும் அலம்பிக் கொண்டு பூவரச நிழலில் சிறிது நேரம் களைப்பாறுகிருள் மாங்கன்று. மத்தியானம் சாப்பிட்ட பிறகு மயக்கமும் பிரட்டும் கொஞ்சம் குறைந்து விட்டபடியால பின்னேரம் அவள் தோட்டத்தில் இறங்கி வேலை செய்தாள். ஆனாலும் பின்னேரம் வேலை முடிந்து திரும்புகையில்,

"மாங்கண்டு அரைவாசி நேரம் வேலை செய்யேல்லையாம். அப்ப நாலு ரூபா தந்தாப் போதுந்தானே" என்று கூறி அரைவாசிச் சம்பளம் தருகிருர் பென்சனியர். "அரசாங்க உத்தியோகமெண்டால் தாப் பத்திரண்டு நாள் லீவு எடுத்தாலும் சம்பளம் வரும். எங்கடை கெதி இப்படித்தான்..." அவள் மனதிற்குள் . மெல்ல முனகிக் கொள்கிருள்.

இப்போது அவளுக்கு ஐந்து மாதம். கருப்பையின் உள்ளே பிள்ளை "ஊருவதும் துடிப்பதும்..." முனனர் அநுபவித்தறியாத ஒரு புதிய அநுபவமாய்...திடீரென்று ஒரு முறை துள்ளி எழுந்து வந்து அடி மேல் வயிற்றில் இடித்து விட்டுப் போகும் போது, மெலிதாய் ஒரு வேதனை தோன்றினுலும் கூட, அந்த இனிமை வேதனைகளை வென்று விடும் போது அவள் ஒரு சின்னச் சிரிப்புடன் தன் வேலைகளைத் தொடருகிருள்.

"அரிசி கொஞ்சம் நனையப் போட்டிருக்காம்........வந்து இடிச்சு விடட்டாம் பின்னேரம்...கேட்டுதே மாங்கண்டு..." குடிசைக்கு வெளியே பென்சனியரின் குரல்தான் கேட்கிறது. இப்போது இரண்டு மூன்று நாட்களாய் எழுந்து நிற்கவே முடியாது என்பது போல் நாரி எல்லாம் விண் விண் என்று வலித்தாலும். பென்சனியர் வீட்டுக்குப் போய் அரிசி இடித்து வறுத்துக் கொடுத்தால் ஒரு கொத்துக்கு ஒரு ரூபா கிடைக்கும். அதை விட்டு விடவும் அவளுக்கு மனம் வரவில்லை.

"சரி ஐயா......பின்னேரம் ஐஞ்சு மணி போலை வாறன்..."

மாலையில் பென்சனியர் வீட்டுப் படலைக்கு அவள் போய்ச்சேருகிற போது வாசலில் கார் ஒன்று நிற்கிறது. பென்சனியரின் மகள் மங்கையை அவளின் கணவர் ஒரு பக்கத்திலும் தாய் மறுபக்கத்திலும் பிடித்து மெல்ல நடத்திக் கொண்டு வந்து காரில் ஏற்றுகிருர்கள். அவர்கள் போய்விட்ட பிறகு......திரும்பி வந்து அமர்ந்த தாயிடம் இவள் கேட்கிருள்.

"என்ன சுகமில்லையே அவவுக்கு...?"

தெல்லிப்பழையை பிறப்பிடமாக கொண்ட இவர், மாணவப் பராயத்திலே எழுதத் தொடங்கியவர், இலக்கியத்துறையில் தனக்கு ஆர்வம் ஏற்படக் காரணமாக இருந்தவர் தனது ஆசிரியராக இருந்த கவிஞர் செ. கதிரேச பிள்ளை அவர்களே என்று கூறும் இவர் தற்போது பலாலி ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் விஞ்ஞானத் துறையில் பயிற்சி பெற்று வருகிருர்.

கடந்த 2 வருட காலத்தில் 15 கவிதைகளையும், 25 சிறுகதைகளையும், பல எழுத்தாளர்களுடன் இணைந்து 3 குறுநாவல்களையும் தனியாக ஒரு குறுநாவலையும் (ஈழநாடு வாசு வெளியீட்டில்) எழுதியிருக்கிருர்.

இவரது முதலாவது சிறுகதை 'குயில்' என்ற சஞ்சிகை ஒன்றில் 1972ல்வெளி வந்தது. தற்போது ஈழநாட்டில் உளவியல் சம்பந்தமான ஆய்வுக்கட்டுரையை தொடராக எழுதி வருகிருர்.



3 வது பரிசு பெற்ற
திருமதி. கோகிலாமகேந்திரன்

'மங்கைக்கு இப்ப ஐந்து மாதமாய் ரேஸ்ஸ் வராமல் நிக்குதெல்லே......... ஸ்ரெயின் பண்ணப்பிடாது என்டு அன் டைக்கும் டொக்டர் அட் வைஸ் பண்ணி விட்டவவாம் நாங்கள் கேற்றைத் தூரத்திலே பொட்டதாலே...இங்கயிருந்து கேற்' வரைக்கும நடக்க வேண்டியதாப் போச்சு மங் கைக்கு. இல்லாட்டி நாங்கள் பட்'டால இறங்கவே விடு றவல்லே......பாததாப் பெரிய உடம்பு. தான் ஆனல் இரத்தம் இல்லே...'

மங்கையின் தாய் அடுக்கிக் கொண்டே போவதை, ஈக்குக் குச்சி போல் கையும் காலும், கொடிபோல் மெலிந்த உடல மைப்பும் கொண்ட மாங்கன்று ஒரு விசித்திரம் போல் கேட் டுக் கொண்டிருந்தாள். அவளுக் கும் ஐந்து மாதந்தான்.ஆனல்..

இரண்டு கைகளிலும் மாறி மாறிப் பாய்கின்ற உலக்கை ஒரு லயத்துடன் உரலில் விழுந்து எழும்புகிறபோது ஒவ் வொரு முறையும் அவள் உடல் நொந்து வலிக்கிறது. உரலில் போட்ட மாவைக் குனிந்து அள்ளி இறக்கும போது தொடைகள் உழை வெடுக்கின்றன. அடுப்பில் ஏற றிய பெரிய இரும்புச் சட்டி யின் கீழே பெரிதாக எரி யூட்டி, அதன் முன்னுல் அமர்ந்து வறுக்கும் போது அந்த வெம்மையில் உடம்பு எரிந்து வியர்வை ஆருய் வழிந்து ஓடுகிறது,

மா வறுத்து முடிகிற நேரத்தில் ஆஸ்பத்திரிக்குப் போன கார் திரும்பி வந்து வாசலில் தரித்து நிற்பதைக் கண்ட பென்சனியார் மனைவி விழுந்தடித்துக் கொண்டு ஓடிப்போய் மகளைக் கைத் தாங்கலாகப் பிடித்துக் கொண்டு வருகிருள்,

"டொக்டர் என்ன சொன் னவ?"

'நல்லா 'றெஸ்ட்' பண்ணட் டாம். இளநீர் தோடம்பழம் பால் நிறையக் குடிக்கட்டாம், 'ஒப்றேன்' குளிசை தொடந்து சாப்பிடட்டாம். இண்டைக்கு முப்பது ரூபா கட்டி ஸ்பெச லிஸ்ட் டொக்டரிட்டைக்காட் டிக் கொண்டு வாறம்...'

மங்கையை கொண்டு போய் படுக்கையில் விட்டு விட்டு......அவளுக்கு உடுப்பு மாற்றித் தேநீரும் கொடுத்து விட்டுத் திரும்பி வந்த தாய்,

## கதாசிரியரின் கடிதம்!

எனக்கு பரிசு கிடைத் ததையிட்டு எனக் கென்ன பெருமை? நீங் களே ஊட்டி வளர்த்த பிள்ளைக்கு நீங்களே பரி சும் கொடுத்து மகிழ்கிறீர் கள்.

கவலையீனமான எங்கள் 'தபாற்காரர் கடும் மழை வெள்ளத்தில் சான்றி தழை நழுவ விட்டுச் சென்று விட்டார். நல்ல மனம் கொண்ட சிறுவன் ஒருவன் அதைக் கண்டெ டுத்து என்னிடம் சேர்ப் பித்தான். அந்தச் சிறுவ னுக்கும் நான் நன்றியு டையவள். இல்லா விட் டால் சான்றிதழே எனக்கு கிடையாமற் போயிருக் குமே.

திருமதி கோகிலாமகேந்திரன்

"மெய்யே மாங்கண்டு... உங்கை எங்காலும் தோடம் பழம் கிடைக்குமே? நல்லாய் தேடிப் பார்த்து ஒரு பத்துத் பன்னிரண்டு வாங்கித் தாறியே..." என்றுகேட்கிருள்.

எத்தனையோ இடங்களுக்கு நடையாய் நடந்து...அலைந்து திரிந்து......அந்தப் 'பிள்ளைத் தாச்சிக்கு'ச் 'சோட்டைச் சாப்பாடு' தேடிக் கொடுத்தது முழுவதும் இந்தப் "பிள்ளைத் தாச்சி"தான்! ஆனலும் இந் தப் 'பிள்ளைத் தாச்சி"—

ஒரு தோடம்பழம் கூடத் தின்று பார்த்ததில்லை;
இளநீர் குடித்ததில்லை.

பாலைக் கண்ணல் கூடக் கண்டதில்லை.

இறைச்சி வாங்க பணம் இருந்ததுமில்லை.

டாக்டரிடம் போக நினைத் ததுமில்லை.

மாதங்கள் வேகமாய் நழுவி ஓடுகின்றன, மாங்கன்று வின் மனதிற்குள்ளே அந்தரங் கமாய் ஒரு வேகம்......

ஒன்பதாவது மாதமும் முடிநத பின்பு ஒருநாள்...... மாங்கன்று பென்சனியர் வீட்டு வளவில் கஞ்சல் கூட் டிக் கொண்டிருந்த போது.... மங்கைக்கு 'வித்தியாசம்' இருந்ததென்று அவதிப்பட்டு ஆஸ்பத்திரிக்கு கொண்டு போனர்கள். அடுத்த நாட் காலையில் மாங்கன்று வந்து தாயிடம் விசாரித்தாள்.

"இன்ஜெக்சன் குடுத்தும் பெயின்ஸ் எழும்பேல்லையாம்... மங்கை சரியா வேதனைப் படு ருள்...பாக்கப் பெரிய பாவ மாக்கிடக்கு"

அன்று மாலையில் மாங் கன்றுக்கும் 'நோக்காடு' கண் டது 'கார் பிடிச்சுக் கொண் டரச் சொல்லி' யாரோ சொன்ன பிறகுதான், பக்கத்து வீட்டில் நின்ற ஒரு பழைய சைக்கிளைத் தள்ளிக் கொண்டு போனன் மாங்கன்றுவின் புரு சன். இரண்டு மைல் தூரம் சைக்கிளில் போய், அவன் ஒரு காரைத் தேடிக் கொண்டு வந்தபோது.........ஒரு அழகிய ஆண் குழந்தையை ஈன்று முடித்திருந்தாள் மாங்கன்று.

# நவீன மனுநீதி

**மணி**

மன்னர் சபையில் வீற்றிருக்கிறார். அருகில் அமைச்சர் அமர்ந்திருகிறார் வழக்கு விசாரணைக்கு வருகிறது.

வழக்காளி ஒரு குடியானவன் பிரதிவாதி ஒரு குடிகாரன். வாதியின் முறையீடு இது தான். பிரதிவாதி தன்னிடம் பணம் கடனாக வாங்கினான். அதற்கான பற்றுச்சீட்டும் கொடுத்தான். இப்போது பணம் வாங்கவில்லை. என்று மறுக்கிறான்: பணம் கைமாறு முன்னே பற்றுச்சீட்டுக் கொடுத்தேன் என்று சாதிக்கிறான்.

மன்னர் வெகுண்டான். இப்படி ஒரு கயமைத்தனமா? யார் இந்த கயவன்? பிரதிவாதியைப் பற்றிய விபரங்கள், சபையில் அவன் சாமானியன் அல்லன். அமைச்சரின் மகன் என்ற 'திடுக்கிடும்' தகவல் வெளிவருகிறது. மன்னர் திகைக்கிறார். பின் சமாளித்துக் கொள்கிறார். அவர் தீர்ப்பு அளிக்கிறார்.

''எமது ஆட்சியில் யாவருக்கும் சமநீதி. நீதித்துறையில் நாம் தலையிட மாட்டோம். அமைச்சர் மகன் குற்றவாளி. உடனே அவனைச் சிறையில் தள்ளுங்கள்!''.

குடியானவனுக்கு அளவில்லா மகிழ்ச்சி மன்னரை வாழ்த்தி மண்டியிட்டு வணங்கிச்செல்கிறான்.

மன்னர் அமைச்சரைப் பார்க்கிறார்' நான் இருக்கிறேன் கவலைப்படாதே' அபயமளிக்கிறது அவர் பார்வை.

சில நாட்களின் பின்—குடியானவன் வீட்டை நோககிச் சிலகுதிரை வீரர்கள். வருகிறார்கள். குடியானவன் திகைத்து நிற்கும்போதே அவனைச் சங்கிலியால் பிணைத்து இழுத்துச் செல்கின்றனர்.

குடியானவன் சபைமுன் நிறுத்தப்படுகின்றான். குற்றப் பத்திரிகை வாசிக்கப்படுகிறது.

கண்ணியமிக்க 'பெருகுடிமகன். ஒருவன் மேல் குடியானவன் பொய் வழக்குப்போட்டு அவமானம் செய்து விட்டானும். ஆகவே அவனுக்கு ஆயுள்தண்டனை வழங்கப்படுகிறது. மன்னரைப் பார்க்கிறான் குடியானவன். அவர் முகத்தை திருப்பிக் கொள்கிறார். அமைச்சரைப்பார்க்கிறான் அவர் பார்வையில் குரூரம் சபையைப் பார்க்கிறான். அங்கே 'பெருங்குடிமகன் கம்பீரமாக வீற்றிருக்கிறான். அவன் பார்வையில் ஏளனம். மேற்கொண்டு அவனால் எதையும் பார்க்கமுடியவில்லை. காவலாளிகள் அவனை தொட்டு தள்ளிக் கொண்டு செல்கின்றனர். சபை கலைகிறது. மக்கள் வாழ்த்தொலிக்கின்றனர். ''மனு நீதிச் சோழன் வழிவந்த எங்கள் மன்னர் வாழ்க! அறங்காக்கும் எங்கள் அமைச்சர் வாழ்க!''

---

"எல்லாம் முடிஞ்சாப் பிறகு இனியென்ன ஆசுபத்திரி............காரைத் திருப்பி அனுப்படா நீ......'' இதுவரையில் மாங்கன்றுவின் 'ஸ்பெசலிஸ்ட்'டாகத் தொழிற்பட்ட குறுக்குக்கட்டுக் கிழவி கட்டளையிட்டாள். மாங்கன்றுவின் குழந்தைக்கு ஆவேசமான வரவேற்புத் தர யாரும் இல்லாவிட்டாலும் அவன் ஆர்ப்பாட்டம் எதுவுமின்றி வந்துவிட்டானே!

"கேட்டியே மாங்கண்டு......பெஞ்சனியற்றை மேனுக்கு இரண்டு மூண்டு நாளா........ நோக்காடு வாறதும் போறதுமாப் பெரிய கஷ்டப்பட்டுக் கடைசியிலை வயித்தைக் கீறித்தான் பிள்ளை எடுத்ததாம்...'' இரண்டு நாள் கழித்துக் கிழவி தான் புதினம் கொண்டு வருகிறாள்.

'கீறின காயத்திலை சிதல் பிடிச்சுப் போச்சாம் ......இன்னும் இரண்டு கிழமை ஆஸ்பத்திரியிலை இருக்க வேணுமாம்......' ஒரு வாரம் கழித்து வந்த செய்தி இது.

மங்கை குடித்து முடித்த தோடம்பழங்களும், பாலும், இளநீரும், விழுங்கி முடித்த குளிசைகளும் மருந்துகளும் என்ன உபயோகத்தைச் செய்தன என்று புரிந்து கொள்ளாமல் தன் மகனைத் தூக்கி மார் போடணைத்துப் பால்தருகின்ற சுகானுபவத்தில் மூழ்கி இருக்கின்றாள் மாங்கன்று.

(யாவும் கற்பனை)

# ஆத்மாவின் தாகங்கள்



## அத்தியாயம் 4

இந்திராணி தாமோதரம்பிள்ளை

காலை இளஞ்சூரியனின் பொற்கிரகணங்கள் திறந்திருந்த யன்னலூடே வந்து அந்த அறையின் தளத்தைமுத் தமிடுகின்றன. யன்னலருகே படர்ந்திருந்த மல்லிகைக்கொடியில்நிறைந்த பூக்கள் இதமான சுகந்தத்தை அள்ளி இறைத்துக் கொண்டிருந்தன. இந்த ரம்மியமான சூழலைப் பூரணமாக அனுபவிக்கமுடியாமல்;கட்டிவில்படுத்துக்கொண்டிருக்கிறுள் சரஸ்வதி. இனிய காலையின்முழுமையானஒளிர்வு பூமியெங்கும் வியாபித்து விட்ட நிலையில்கூட எழவேண்டும் என்ற ஆர்வமோ, ஆவலோ அவளிடம் இல்லை. ஏதோ ஒரு வெறுமை கலந்து விட்ட அவளது பார்வை அறையின் உள்முகட்டில் பதிந்திருக்கிறது. கூரைச் சரிவில் தெரிந்த சிலந்தி வலைகளை அவளது பார்வை மொய்க்கின்றபோது ஏதோ ஒரு நினைவு வந்து மோதுகின்றது.

"உண்மையாத்தான் சரஸ்" அந்தச் சிலந்திகளின்ரை சுறுசுறுப்பைப் பாக்கேக்கை எனக்கு உன்ரை ஞாபகந்தான் வருது...அவளது கணவர் அடிக்கடி சொல்லும் வார்த்தைகள். இப்போது அந்தச் சுறுசுறுப்பு எங்கே ஓடி ஒளிந்து விட்டதென்று அவளே தன்னைக் கேட்டுக் கொள்கிருள். அதி காலையிலே எழுந்து குளித்து முழுகி, வாசலில் கோலமிடுவது முதல் வீட்டுக் காரியங்களை ஆரம்பிப்பது வரையில் அவளிடம் ஒரு காலத்தில் மண்டிக்கிடந்த ஆர்வம் எப்போதோ மெல்ல அவளிடமிருந்து விலகத் தொடங்கிவிட்டது. தொண்டைக்குழியில் நமைச்சலை உண்டாக்கியபடி இருமலொன்று புறப்படுகிறது. "அம்மா" என்ற மெல்லிய முனகலோடு நெஞ்சைக் கரங்களால் அழுத்திப் பிடித்துக் கொள்கிருள் அவள். சில மாதங்களாக அவளைப் பற்றியிருந்த 'தொய்வு' நோயும் இடைக்கிடை அவளை உலுக்கி எடுத்துக் கொண்டிருக்கிறது.

"டாண்......டாண்...."

முன் கூடத்தில் இருந்த சுவர்க் கடிகாரம் ஆறுமுறை அடித்து ஓய்கிறது. சூடான கோப்பி தொண்டையின் ஊடே இறங்கினுல் இதமாக இருக்கும் என்று உள்ளம் சொன்னபோதும் கை கால்களில் அடித்துப் போட்டாற் போன்ற அசதி.

"பெரிய மாமீ!" வாசலில் அரவம் கேட்கிறது. கலா தான். போர்வையை உதறிவிட்டு மெல்ல எழுந்து வந்து வாசல் கதவைத் திறக்கிருள்.

"என்ன மாமி.........இரவு முழுவதும் ஒரே இருமல் எண்டு அம்மா சொன்னு. அதுதான் காலமை எழும்பிக் கோப்பி வைக்க கஷ்டப்படுவீங்க ளெண்டு கோப்பி போட்டுக் கொணந்தனுன்..."

வழமையான மெல்லிய புன்னகையுடன் உள்ளே நுழைந்து 'பிளாஸ்க்'கை மேசையின் மேல் வைக்கிருள் கலா. ஈரமான கூந்தலை நீளப் பின்னலாக முடிந்து மல்லிகைச் சரத்தைச் சூடி மங்களகரமாகத் தோன்றும் கலாவைப் பார்க்கும்போது அடி வயிற்றில்'குப்'பென்று ஏதோஒன்று பற்றி எரிகிறது. கலா நின்றுகொண்டிருந்த நிலையில் குழுதாவை சிந்தித்துப் பார்க்கிருள்.

"என்ன பெரிய மாமி...... முகத்தைக் கழுவிக் கொண்டு வந்து குடியுங்கோவன்" அவன் வந்து சமயலறையைத்தாண்டிப்பின் புறம் வருகிருள். கொல்லைப்புறக் குழாயருகே நிறுத்தியிருந்த மரப்பெட்டியின்மீது பற்பொடிப் போத்தல் வைக்கப் பட்டிருக்கிறது. உள்ளங்கையில் கொட்டி விரலால் தொட்டு அழுத்தமாகத் தீட்டுகிருள். விரல்கள் வலிக்கின்றன. குழாயைத் திருகிக் குளிர்ந்த நீரை முகத்தின் மீது அள்ளி இறைத்த போது

இதமாக இருக்கிறது. உள்ளே அடியெடுத்து வைத்தவளைப் பளிச்சென்ற கூடம் வரவேற்றது. கதிரை யொன்றில் இருந்து மாலை கட்டிக் கொண்டிருக்கிருள் கலா.

'குடியுங்கோ பெரிய மாமி நான் ஊத்தித் தாறதே......'

"வேண்டாம் கலா........" என்றபடி பிளாஸ்கைத் திறந்து ஆவி பறக்கும் கோப்பியைக் கிண்ணத்தில் ஊற்றிக்கொண்டு கதிரையில் சாய்ந்து அமர்கிருள்.

"என்ன கலா............இண்டைக்கு நேசரி வகுப்பு இல்லையோ.........?"

'இண்டைக்குவகுப்பு வைக்கேல்லை மாமி... அம்மாவுக்கும் கொஞ்சம் சுகமில்லை. இவரும் பின்னேரம் ஒரு கலியாண வீட்டுக்குப் போகவேணும் எண்டவர்......!

சரஸ்வதியின் இதயத்தில் உணர்வலைகள் பாய்ந்து கலங்குகின்றன. அவளுக்குக் கூடத் தான் உடல் நலமில்லை. கோப்பி போடக்கூட உடல் வலுவில்லாத மாதிரி உடம்பெல்லாம் கனக்கிறது. ஆனால் இந்தக் கலாவைப்போல் தாய்க்காகத் தனது வேலைகளையெல்லாம் விடுத்து வீட்டில் தங்கி நின்று பணி செய்ய மகளில்லை. இருந்தும் இல்லாதவளாய்ப் பல்லாயிரக்கணக்கான மைல்களுக்கு அப்பாலிருக்கும் குமுதாவை நினைத்தாலே மெல்லிய வேதனை மனத்தை ஊடுருவிச் செல்கிறது. கணவனின் மறைவிற்குப் பின்னே, எத்தனையோ கஷ்டங்களைச் சுமந்து மகளை உருவாக்கிய போதும், தனக்கு இயலாதிருக்கிற இந்த நாட்களில் அவள் அருகில் இல்லையே என நினைக்க, மகளின் பல்கலைக் கழகப் பட்டமும் வெளிநாட்டுப் பயணமுங்கூட வெறுமையாய்த் தெரிகின்றன முதன்முதலாய்!

"என்ன...மாமி... கோப்பி ஆறப்போகுது......"கலா கட்டிய சரத்தை இரு தனித்தனி மாலைகளாகக் கட்டி ஒன்றைச் சுவாமி படத்திலும் மற்றதைத் தெய்வமாகிவிட்ட சரஸ்வதியின் கணவரது படத்திலும் போடுகிருள். அது அவளது வழமையான பணி.

மடமடவெனக் கோப்பியைக் குடித்துவிட்டுக் கிண்ணத்தை மேசையின் மீது வைக்கவும், "அப்ப நான் போட்டு வாறன் மாமி. இண்டைக்குச் சமயலும் என்னுடைதான்" என்றபடி பிளாஸ்கை எடுத்துக் கொண்டு வெளியேறவும் சரியாக இருக்கிறது. திடீரென எதையோ நினைத்துக் கொண்டவள், "கலா.........கொஞ்சம் நில்லன்...இரவு வைச்ச குழம்புக் கறி எல்லாம் அப்பிடியே இருக்குது. கொண்டு போனல் யாருக்காவது கொடுக்கலாமே" என்ருள்.

"நீங்கள் ராத்திரி சாப்பிடேல்லையோ மாமி..."

'கொஞ்சந்தான் சாப்பிட்டனுன் பிள்ளை. இந்த வயதிலை என்னலை நிறையச் சாப்பிடஏலுமே! குளிசையும் மருந்தும் சாப்பிட்டே வயிறு நிரம்பிப் போகுது... ஏதோ உயிர் இருக்கிற வரையுந்தானே...' நீண்டதொரு பெருமூச்சு வெளிப்படுகின்றது அவளிடமிருந்து.

"ஏன் மாமி...... அப்பிடிச் சொல்லிறியள்...நாங்கள் எல்லாம் எங்கே போயிட்டம்...... குமுதா கடிதம் போடேல்லையா?........"

'எழுதிருள்; எழுதி என்ன

# இறந்த யானை ஏழு மீட்டர் வளர்ந்தது

கடந்த ஆண்டு லெனின் கிராட் விமான நிலையத்துக்கு விமானம் மூலம் ஒரு ராட்சச வெப்பக் கொள்கலததைக் கொண்டுவந்து இறக்கினுர்கள். இக்கொள்கலத்தினுள் துருவாப் பிரதேசத்தில் உறை பனியில் அமிழ்ந்து கிடந்த ஒரு பெண் யானையின் உடல் இருந்தது!

இந்தப் பெண்யானையின் உடலை உறை பனியில் கண்டுபிடித்த புவிகற்பவியலாளர்கள் உயிரியல் நிபுணர்களை ஸ்தலத்திற்கு அழைத்தனர். இந்தப் பெண் யானை 1,000,000 ஆண்டுகளுக்கு முன்னர் இறந்ததென உயிரியலாளர் முடிவுக்கு வந்தனர். ஆனுல் உறைபனியில் அமிழ்ந்து கிடந்த இநத இறந்த யானை 12—15 ஆண்டுகள் வயதுடையதென்றும், இக்காலத்தில் 7 மீட்டர் வளர்ந்து விட்டதென்றும் அவர்கள் கூறினுர்கள். இந்தப் பெண் யானையின் உடல் சம்பூர்ணமாக பழுதுருத நிலையில் இல்லாவிட்டாலும், அதனது உரோமம், மாமிச திசுக்கள் உட்பாகங்கள் யாவும் எதுவித பழுதுமடையாமல் இருந்தனவாம்.

நன்றி! "சோவியத்நாடு"

—கதிர்மாணிக்கம்

# கலரிக்கு குறள்

* தந்தை மகற்காற்றும் உதவி—கலரியில் முந்தியிருக்கச் செயல்.

* மகன் தந்தைக்காற்றும் உதவி—கலரியில் சீற் பிடித்துக் கொடுத்தல்.

* ஈன்ற பொழுதிலும் பெரிதுவப்பாள் தன்மகன் கலரியில் விசிலடிக்கக் கேட்ட தாய்.

"அம்பி"

கொழும்பு—13.

செய்யிறது? எத்தனை ஆயிரம் மைல்களுக்கு அங்காலைஇருந்து கொண்டு......பெருமூச்சு விடுறத்துக்கோ பிள்ளையளைப் பெத்து வளத்தனான் எண்டு நினைக்க வேண்டி இருக்கு......' அவளது இதயத்தின் ஏக்கம் கலாவிற்குப் புரிகிறது. மௌனமாக உள்ளே சென்று கறி வைத்திருந்த கிண்ணங்களை எடுத்துக் கொண்டு திரும்புகிறாள். சரஸ்வதி இன்னுங் கூட ஜன்னல் கம்பிகளைப் பிடித்துக் கொண்டுநிற்கிறாள். அவளது மன ஏடுகள் பின்னோக்கிப் புரட்டப்படுகின்றன.

"அம்மா, எனக்கும் குமுதாவிற்கும் யூ. கே. க்குப் போகச் சந்தர்ப்பம் கிடைச்சிருக்கு......" மகிழ்வு நிறைந்த முகத்தோடு உள்ளே ஓடிவருகிறான் பிரேமன்.

'உண்மையாகவே தம்பி... ஆண்டவனே நான்நினைச்சதையெல்லாம் நிறைவேற்றிவைச்சிட்டாய்...... ......நான் கண்ட கனவெல்லாம் பலிச்சிட்டுது... பெருமிதம் இதயத்தில் பொங்க மகிழ்வின் உச்சக் கட்டத்தில் நிற்கிறாள் இவள். கணவர்இறந்தபோது,"இந்தச் சின்னஞ் சிறுசுகளை வைச்சுக் கொண்டு என்ன செய்யப் போகிறாய் சரசு?" என ஒரு காலத்தில் அங்கலாய்த்தவர்கள் எல்லாம், வெறும் தூசுகளாகக் கண்ணிற்குத் தோன்றுகின்றனர். பிள்ளைகளைப் பெற்றதன் பெருமையை அவள் அந்தக் கணத்திலே பரிபூரணமாகப் பெற்று விட்டதாக உணர்ந்தாளே! விமான நிலையத்தில், "அம்மா நாங்கள் போயிட்டு வாறம்..." எனக் கண்ணீரோடு கூறிய பிள்ளைகளை வழி அனுப்பி வைத்த போது, எல்லாரையும் விட உயர்த்து விட்டோம் என்ற தலை நிமிர்வோடு வெளியே வர முடிந்த அவளால் மிகச் சில நாட்களின் நகர்விலேயே சூழ்ந்திருந்த வெறுமையை உணர முடிந்தது.

"பெரிம்மீ....பெரிம்மீ...... பந்து அடிச்சு........"தேனைப் பாய்ந்த மழலைக்குரல் அவளைத் திடீரெனத் திரும்ப வைக்கிறது. திரும்பிய திக்கில் பூச்சுவியல்போல் கலாவின் பிள்ளை முரளி. வாரி எடுத்து மார்போடு அணைத்துக் கொள்கிறாள் சரஸ்வதி. அதில் ஏதோ ஒரு பாச உணர்வு ஊற்றெடுக்க, இரண்டு கன்னங்களிலும் மாறிமாறி முத்த மிடுகிறாள்.

"அம்மா ஆச்சு...பெரிம்மீ அழுது...பெரிம்மீ பாஆவம்..." தனது பிஞ்சுக் கரங்களால் ஈரமான அவள் கன்னங்களைத் துடைத்து விடுகிறான் முரளி.

'நான் என்னத்துக்குப் பிறந்தனான் எண்டு நினைச்சு அழுகிறன் கண்ணு .....' அவள் கூறியதில் என்ன புரிந்ததோ கன்னம் குழியச் சிரிக்கிறான் குழந்தை.

"முரளி... முரளீ .....சாப்பிட இல்லையே....." வாசலில் பாக்கியத்தின் உருவம் நிழலாகத் தெரிகிறது.

'பாட்டி...... வாறன்......... பாட்டி.....' துள்ளி இறங்கி வாயிலை நோக்கி ஓடுகிறான் முரளி."என் தங்கக் கண்ணு..." பாக்கியம் அள்ளி அணைத்து முத்தமிட்டபடி திரும்புகிறாள். சொற்பநேரம்கிடைத்தபாசம் கூட அற்றுப்போய்விட்ட நிலையில் இதயம் துடிக்கின்றது.

"அம்மா......நான் யூ.கே.க்குப் போய் எல்லாம் சரியானஉடனே உங்களுக்கும் டிக்கட் அனுப்பிறன்.நீங்களும் அங்கை வந்து எங்களோடை இருந்திட்டா......எல்லா பிரச்சினையும் முடிஞ்சிடும்........"மகன் கூறிவிட்டுப்போன வார்த்தைகள் மீண்டும் மீண்டும் எதிரொலிக்கின்றன. அவளும் அதைத்தான் எதிர்பார்க்கிறாள். இந்த வெறுமையான வரண்ட பாலைவனம் போன்ற வாழ்வு...அவளால் வாழமுடியவில்லை. பாக்கியத்தின் வீட்டில் ஏற்படும் பொருளாதாரப் பிரச்சினைகள், சிறுசிறு சச்சரவுகள்கூட அவளுக்குத் தெரியும். ஆனால் அவர்களிடையே பின்னிப் பிணைந்துள்ள அந்தப் பாசம், அன்பு......இவள்வரையில் ஒரு ஏக்கத்தையே ஏற்படுத்துகிறது. பாக்கியத்திற்குத் தலை வலித்தால்கூடக் கலாபதறித்துடித்துவிடுவாள். இங்கே மணித்தியாலக் கணக்காகக் கட்டிலில் சாய்ந்திருந்தாலும். கேட்க நாதியில்லை. படிப்பு இருந்தென்ன? பணம் நிறைந்திருந்தென்ன? இறுதிக் காலத்தில் அவளது இதயம் ஏங்கித் தவிக்கும் உண்மையான அன்பைத்தவிர, உரிமையாக யாருமே இல்லை.

"பிரேம்...நான் கொள்ளி வைக்கக்கூட ஆளில்லாத அநாதையாகச் செத்துப் போவனே...?"வாய்விட்டே விம்முகிறாள் அவள். அவளுக்காக இரங்குவது போல், மாமரக் கொப்பில் அமர்ந்திருக்கும் குயில் ஒன்று சோகமாகக் கூவிக்கொண்டிருக்கிறது.

அடுத்த இதழில்
தொடர்பவர்:

**மாவை பாரதி**

---

### அண்ணாவின் நகைச்சுவை

தமிழர்களிடம் "சௌக்கியமா? என்று கேட்டால் ஏதோ இருக்கிறேன்" என்று மேல் ஸ்தாயியில் தொடங்கி பெருமூச்சோடு கீழ்ஸ்தாயியில் முடிப்பர். இதனால் கேட்பவர்களுக்கு கலக்கமாக இருக்கும். சௌக்கியமா இருக்கிறேன் என்றால் என்ன?

மேல்நாட்டவர்களிடம் ஹௌ டு யுடு(How do you do) என்றால் 'ஓ.கே' (O.K) நன்றாக இருக்கிறேன் என்று பதிலளிப்பார்கள். அதனால்தான் அவர்கள் வாழ்கிறார்கள் நாம் ஏதோ இருக்கிறோம்.

கு. முரளிதரன், அக்கரைப்பத்தனை.

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

'ரம்யா......... என்னையா உணர்ச்சியில்லாத ஜடமென்கிறாய்! சுரேனோடு இருக்கும் ஒவ்வொரு கணமும் நான் என் உணர்ச்சிகளை எப்படிக் கஷ்டப் பட்டு அடக்கிக் கொள்கிறேன் தெரியுமா?......சுரேன் எத்தனை முறை தன்னோடு வந்து விடும்படி கேட்கும் பொழுதெல்லாம் உங்கள் மீது உள்ள பாசத்தால் தானே தைரியம் இல்லாமல் நின்றிருக்கிறேன்! அது எல்லாம் யாருக்காக? ...... உங்களையெல்லாம் நல்ல நிலைமையில் வைக்க வேண்டுமென்பதற்காகத் தானே! என் இளமையைக் கரைய விட்டுக் கொண்டு ...மாடாக உழைத்தேனே...... கொஞ்சமாவது யோசித்துப் பார்த்தாயா? அக்கா ஒருத்தி சுமைகளை தாங்க இருப்பதால் நீ கொஞ்சமும் கூட ஏற்கவிரும்பாமல் உன்னுடைய வாழ்க்கையை மட்டும் சிந்திக்கிறாயோ? இன்று நீ யென்றால்... நாளை சுமதி... பாபு என்றிருக்க மாட்டார்கள் என்று என்ன நிச்சயம்?'

எண்ணங்கள் மாறி மாறி எழுந்து வித்யாவின் மூளையை நோக வைத்தன.

அடுந்த நாள் மாலை. தன்னுடைய உடுப்புக்களைப் பரபரவென்று அடுக்கும் வித்யாவை அம்மா, தம்பி, ரம்யா, சுமதி எல்லோரும் கோபத்துடன் பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

"வித்யா உனக்கு எவ்வளவு கல் நெஞ்சமடி? எங்களையெல்லாம் அநாதையாக விட்டுட்டு நேற்று வந்த ஒருத்தனோடு போகப் போறன் என்கிறாயே?" அம்மா தான் இருமிக் கொண்டே கேட்கிறாள்.

"தம்பியை வேலையாக்கிப் போட்டு ...தங்கச்சியைப் படிப்பிச்சிட்டுத் தான் போறன் அம்மா. முப்பத்தொரு வயது வரையும் குடும்பத்துக்கு உழைத்துப் போட்டவளை ஒரு வாழ்க்கையைத் தேடவிடாமல் இன்னும் உழைக்கக் கேட்கிறவள் உண்மையான தாயாக இருக்க மாட்டாள்"

"தாயைக் கவலைப் படுத்திப் போறவள் உண்மையான மகளாக்கும்" ரம்யா தான் ஆத்திரத்துடன் வெடித்தாள்.

வித்யா சிரித்துக்கொண்டே அவள் அருகில் வந்தாள்,

"ரம்யா... அக்கா மீது எல்லாப் பாரத்தையும் சுமத்தி விட்டு குடும்பப்பொறுப்பே இல்லாமல் ஓட நினைப்பவளும் உண்மையான தங்கைச்சியாக இருக்கமாட்டாள். என்னைப் போலவே நீயும் உன்னுடைய பொறுப்புக்களை நிறைவேற்றி விட்டு தம்பி பாபுவின் கையில் உன்னுடைய சுமையை இறக்கும் காலம் வந்தவுடன் உனக்கென்று ஒரு வாழ்க்கையை தேடிக் கொண்டு விடலாம் ரம்யா"

கோபத்துடன் முறைக்கும் ரம்யாவை சட்டை செய்யாமல் ஸூட்கேஸை தூக்கிக் கொண்டு நடந்தாள் வித்யா. அம்மாவின் விம்மல்கள் மட்டும் தொடர்ந்து வந்து மனதைப் பிசைய வைக்கின்றன. திரும்பிப் பார்த்தால் எங்கே ஆத்மா, தைரியத்தை மீண்டும் இழந்து விடுமோ என்ற அச்சத்தில் விரைவாகத் தனக்கென பஸ் ஸ்டாண்டில் காத்திருக்கும் சுரேனை நோக்கி நடக்கிறாள் வித்யா.

(யாவும் கற்பனை)

## —கலைஞரின் மூளை—

"மணமகள்" படத்திற்கு வசனம் எழுத எவ்வளவு பணம் வேண்டும் என்று கலைவாணர் என்னைக் கேட்டார். எனக்குத் தெரியாது என்று பதில் சொன்னேன். ஒரு கடதாசித் துண்டில் ஏதோ எழுதி, அதைச் சுருட்டி என் கையிலே வைத்தார். நான் அதைப் பிரித்துப் பார்க்காமலே வைத்துக் கொண்டேன். பிரித்துப் பாருங்கள் என வற்புறுத்தினார். பிரித்துப் பார்த்தேன். அதில் நாலு பூஜ்யங்கள் எழுதப்பட்டிருந்தன. எனக்கு தூக்கிவாரிப் போட்டது. நாலு பூஜ்யங்கள் எழுதிக் கொடுத்திருக்கிறீரே! அவர் என்னைப் பார்த்து புன்னகைத்தார். அதில் ஏதோ நகைச்சுவை இருக்கிறது என்று புரிந்து கொண்டு சரி சம்மதம் என்றேன். அப்படியா சம்மதமா? என்று தம் விழிகளை அகலமாக ஆக்கிக்கொண்டு கேட்டார். ஆமாம் சம்மதம்தான் என்றேன்.

'சீட்டை கொடுங்கள்' என்று வாங்கிக்கொண்டார் இதில் 'ஒன்று' எங்கே போடுவது? முன்னாலா பின்னாலா என்று கேட்டார். எங்கு வேண்டுமானாலும் போடுங்கள் என்றேன். அவர் கடைசியாக ஒன்று எழுதினார் 00001 என்று எழுதப்பட்ட சீட்டை என்னிடம் கொடுத்தார். சிரித்துக் கொண்டே சரிதானா? என்றார். நான் சரிதான் என்று கூறியபடி அவர் கொடுத்த சிறிய சதுரமான சீட்டை தலைகீழாக மாற்றிக் காட்டினேன்! அப்போது 1 முதலிலும் நான்கு பூஜ்யங்கள் அதனைத் தொடர்ந்தும் (10,000 என்று) காட்சியளித்தன. அதைப் பார்த்து விட்டு கலைவாணர் "ஆகா" என்னையே ஏமாற்றி விட்டீர்களே! என்று வயிறு குலுங்கச் சிரித்தார்.

இப்படி நகைச் சுவையுடனே எங்கள் கலையுலகத் தொடர்பு ஆரம்பமானது"!

—"கலைஞர் கருணாநிதி"

—தகவல்—"கண்ணன்"

"மில்க்வைற் நீல சோப்"

திருப்திகரமான சலவைக்கும் பளிச்சிடும்
வெண்மைக்கும்
மில்க்வைற் நீல சோப்பை
வாங்கி உபயோகியுங்கள். மேலுறைகளை
சேகரித்து அனுப்பி
பெறுமதி வாய்ந்த பரிசுகளையும்;
அறிவு— நூல்களையும், மில்க்வைற் செய்தி
யையும், 1981-ம் ஆண்டு புதிய கலண்டரை
யும் பெற்றுக் கொள்ளுங்கள்.




மில்க்வைற் சவர்க்காரத்
தொழிலகம்
த. பெ. எண்— 77, யாழ்ப்பாணம்
தொலைபேசி: 7233


## "சுடர்" வட்ட நிபந்தனை

சுடர் வட்டம் மூலம் இலக்கிய நண்பர்—நண்பிகளுடன் தொடர்பு கொள்ள விரும்புபவர்கள் கீழ்க்காணும் விலாசத்தை அஞ்சலட்டையில் ஒட்டி அனுப்பிவைக்கலாம். தெளிவான விலாசத்துடன் தங்கள் பொழுது போக்கு விபரக் குறிப்புகளுடன் அஞ்சலட்டையில் மட்டுமே அனுப்பிவைக்க வேண்டும்.

சுடர் வட்டம்
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு—12.

## 'சுடர்' சந்தா விபரம்

ஆறு திங்கள் — 9-00
ஒரு ஆண்டு — 18-00
(தபாற்செலவு உட்பட)

நிர்வாகி அவர்கட்கு,


இத்துடன் அரை/ஒரு வருட சந்தா தொகையான ரூபா.........க்கான மணி ஓடர்/போஸ்டல் ஓடரை அனுப்பி வைக்கிறேன். என்னையும் சந்தாதாரராக சேர்த்துக் கொள்ளும்படி வேண்டுகிறேன்.

முழுப்பெயர்: ..............................

விலாசம்: ..............................

..............................

நிர்வாகி,
சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்,
194 ஏ, பண்டாரநாயக்க வீதி,
கொழும்பு-12.






இச்சஞ்சிகை 194 ஏ, பண்டாரநாயக்க மாவத்தை, கொழும்பு—12 இல் உள்ள சிலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டரால் அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.